

# வெண்முத்து

## பவள விழா நினைவு மலர்

(1950 – 2024)

கமு/சது/ அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி
(தேசிய பாடசாலை)
சம்மாந்துறை

பிரதம ஆசிரியர்:

**HM. அன்வர் அலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Principal
KM/ST/ Al-Marjan MLC (N.S)
Sammanthurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 24175

Principal
KM/ST/ Al-Marjan MLC (N.S)
Sammanthurai

# வெண்முத்து

## பவள விழா நினைவு மலர்

## (1950 – 2024)

CLASS NO.
ACCESSION NO. 24175

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி

**கமு/சது/ அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி**

**(தேசிய பாடசாலை)**

**சம்மாந்துறை**

பிரதம ஆசிரியர்:

**HM. அன்வர் அலி**

Principal, (SLPS-1)

BA (Cey), PGDE, Dip. in Eng, MA (Psc)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Book Name | : | 'Venmuththu' |
| School Name | : | Km/St/Al- Marjan Muslim Ladies College<br>(National School)<br>Sammanthurai. |
| School Address | : | Ampara Road, Sammanthurai. |
| Edition | : | First Edition (2024) |
| Layout, Cover Designing | : | AM. Mohamed Aasik |
| Type Setting | : | Ms. MA. Fathima Sajitha (DO)<br>Miss. M. Fakiha Kowther (DO)<br>Mrs. MI. Asmath Banu (DO) |
| Photo Collection | : | Mr. ALM. Jabir (Senior Tr. Rtd.) |
| Printing | : | Print House Advertising - Sammanthurai. |
| Publication | : | Marjan Media & Publication |
| Page | : | 118 |
| Prize | : | Rs. 1000/- |
| Publish | : | August 2024 |
| ISBN No. | : | 978-624-6606-00-8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் ஆரம்ப இலட்சினை

Principal
KM/ST/ Al-Marjan MLC (N.S)
Sammanthurai

நன்றி - வெண்முத்து (1973)

## பாடசாலையின் தற்போதைய இலச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம் - Motto

Humanism of Humanity

மனித நேயமிக்க மானிடம்

## தூர நோக்கு - Vision

Aims to be a School of Excellence,
Dedicated to For Producing Noble Citizens of The Future,
with Young Ladies.

எதிர்காலத்திற்கான சீரிய பிரஜைகளை
உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புமிக்க இளம் மகளிர்

## பணிக்கூற்று - Mission

Is to Develop Our Pupils to Achieve Their Spiritual,
Moral, Intellectual, Social, Physical Potentials in Safe,
Secure Faith Based Environment

பாதுகாப்பான நம்பிக்கைமிக்க சூழலில் மாணவர்களின் ஆத்மீக,
ஒழுக்க, புலமைத்துவ, சமூக மற்றும்
பௌதீக வாய்ப்புக்களை விருத்தி செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் ஆரம்ப கீதம்

(வித்தியாலயப் பிரார்த்தனை கீதம்)

ஆதி இறைவா அருள்மறை இறைவா அருள்வாய்

உனதன்பை அன்பாலுலகை அடிபணித் தாயே

ஆண்டருள் புரிந்திடு வாயே!

கல்வியைக் கற்றிட வேண்டும் கறைகளை நீக்கிட வேண்டும்

கலைகளும் நிறைந்து நிலைகளுமுயரக் காப்பவனே அருளே!

அறிவினை யூட்டி அகத்தினைத் துலக்கும் அன்பருள் ஆசிரி யோரின்

அறமொழிப் படியே அனைத்திலும் நடந்து அறிஞராய் விளங்கருள் வாயே!

கருணைக் குரியநம் பெற்றோர் கலைகளுக் குதவிடும்

மற்றோர் இறைவனின்னாசி என்றுமே பெற்று இன்புறவே அருளே!

உலகினர் புகழும் கலைபல வளரும் உறையுஞ்சம் மாந்துறையின்

உயருமல் மர்ஜான் ஒளியுடன் மிளிர உறுதுணை புரிந்திடு வாயே!

**MS.** ஹமீட் - பிரதி அதிபர்
(பாலமுனை)

நன்றி - வெண்முத்து (1973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தர்ஹோகைய கீதம்

(வித்தியாலயப் பிரார்த்தனை கீதம்)

அல் மர்ஜான் மகளிர் கல்லூரி
நல் அன்னையர் விளைவு நிலம்
கல்வி வளம் பொழிக மனவளமும்
அல்லாஹ் நீயருள்வாய்

(அல்-மர்ஜான்)

இலக்கணம் அல்குர்ஆன்
வாழ்க்கையில் இலக்கியம்
அண்ணல் நபி உலகியல் மறுமை வழி
தொடர் நடையில் அமைகவே நல்லநெறி

(அல்-மர்ஜான்)

தாய்க்குலம் சிறந்தாலே உலகில்
நல்ல சமுதாயம் தழைக்கும்
பாத்திமா நாயகியின் உயர்
மகளிர் பண்புகள் நாம் பெறுவோம்

(அல்-மர்ஜான்)

செம்மைக் கொடி பறக்க பிள்ளைகளின்
செழுஞானம் அசைக்க சம்மாந்துறைத் தாயே
நீ உலகில் சங்கை மலிந்திடுவாய்

(அல்-மர்ஜான்)

மர்ஹூம் பாவலர் பஸீல் காரியப்பர்
(1985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அடிப்படைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| 01. | Name of School | : KM/ST/ Al-Marjan Muslim Ladies College (National School) |
| 02. | Establishment | : 01.09.1950 |
| 02. | Address | : Ampara Road, Sammanthurai |
| 03. | School Type | : 1AB (National School) |
| 04. | Telephone Num | : 067-2260239 |
| 05. | Fax Number | : 067-2260239 |
| 06. | Email Address | : principalalmarjanmlc@gmail.com |
| 07. | Facebook Name | : Al-Marjan M.L.C National School Sammanthurai<br>https://www.facebook.com/profile.php?id=100057094494493 |
| 08. | Regional Education | : Sammanthurai |
| 09. | Zonal Office | : Sammanthurai |
| 10. | Province | : Eastern |
| 11. | Divisional Secretary Division | : Sammanthurai |
| 12. | Grama Niladhari Division | : Karuwattukal - 02 |
| 13. | Grama Niladhari Division No | : 92G |
| 14. | School Census No | : 15169 |
| 15. | School ID No | : 1611006 |
| 16. | School Exam Center No | : 15044 |
| 17. | School Registration No | : BT.174 |
| 18. | School Land Area | : 3 acres, 2 root, 31 perch |
| 19. | School Land Perimeter | : 475m |
| | Student Population | : 1250 |
| 20. | Principal of School | |
| | • Name of Principal | : Mr. HM. Anver Ali |
| | • Grade | : SLPS - I |
| | • Phone Number | : 077 138 7166 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் யூ.எல். அலியார் MA (Ed.) வழங்கிய ஆசியுரை

கமு/சது/ அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையின் வெண்முத்து தனது 75வது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடும் வெண்முத்து சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி என்னுடைய ஆசிரியப் பணியுடனும் கல்விப் பணிப்பாளர் பணியுடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டது என்பதை நினைக்கும்போது என் மனம் பூரிப்படைகின்றது. இந்த மூன்று பணிகளிலும் இக்கல்வி நிறுவனத்தை கல்லூரித் தரத்துக்கு இட்டுச் செல்லும் பல அடிப்படையான தோற்றப்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தமை மனநிறைவை தருகின்றது.

இக்கல்லூரியில் தொடர்ந்து பணியாற்றிய அதிபர்களும் ஆசிரியர்களும் பற்றாரும் நலன் விரும்பிகளும் சம்மாந்துறையில் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியாக பிரகாசிக்க தேவையான பணிகளை மேற்கொண்டமையால் சம்மாந்துறையின் பெண்கல்வி வரலாற்றில் முக்கிய மைல்கல்லாகும். எதிர்காலத்தில் இதன் சிறப்பு மேலும் 'வெண்முத்து' என ஒளிர வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவண்
**கலாபூசணம் U.L. அலியார்** MA (Ed.)
சமாதான நீதவான்,

சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வெண்முத்து’

ஒரு பாடசாலையின் வரலாறு என்பது அச்சமூகத்தின் அடையாளம். அதனை அறிந்து கொள்ளும் வாய்ப்பு என்பது எட்டாக்கனியாகவே இருக்கும் இக் காலகட்டத்தில் சம்மாந்துறை மண்ணின் இரு பெரும் கல்வித் தாயின் வரலாற்றை அதன் குழந்தைகளை அறியச் செய்து அவற்றின் மகிமையை உணர்த்துவது என்பது தணியாத தாகத்துடன் பயணிக்கும் ஒருவரால் தான் முடியும் என்றால் அது மிகையாகாது. அவ்வாறான வரலாற்று தேடல் கொண்ட ஓர் ஆளுமையின் முதல் வெளிப்பாடு “ஆல விருட்சம்”. தாகத்தின் இரண்டாவது பிரசவமாக இன்று எங்களுடைய கரங்களிலே எமக்கு மாத்திரம் அல்லாது எதிர்கால சந்ததியினருக்கும் ஓர் சுவட்டினை தனது ஓய்வுக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்காக உறுதி பூண்டு ஓய்வில்லாது இரவு பகல் பாராமல் அதற்காக தன்னுடைய நேரத்தை அர்ப்பணித்த எமது எழுத்தாளர் ஜனாப்.H.M.அன்வர் அலி சேர் அவர்களிற்கு முதற்கண் மனம் நிறைந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.

பெண்களின் கல்விக்கான மகிமையை உணர்த்திய மகாகவி பாரதியின் “மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” எனும் வரிக்கு வலு சேர்க்கவும் பெண்களை நாட்டின் பெரிய சக்தியாக பார்த்து “பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்... பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்“ என்ற உணர்வு கலந்த கவிதைக்கு மேன்மை சேர்க்கவும், ஆண், பெண் கலவன் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை முஸ்லிம் பெண்கள் கல்வியில் பின்தங்கியிருந்த காலத்தில் கல்வியில் முஸ்லிம் பெண்களின் பங்குபற்றலை அதிகரிக்க எடுத்த பிரயத்தனங்கள் மிகக்கனதியானது.

தனியான பெண்கள் பாடசாலையின் அவசியத்தினை உணர்ந்து அவற்றுக்கு மேலும் உந்து சக்தி அளிக்க ஊர்மக்கள் கூடி ஊர்வலம் சென்று விழிப்புணர்வால் மாணவர் வரவை அதிகரித்தமை மிக முக்கியத்துவமிக்க பூர்வீக வரலாறாகும். இதன் விளைவாக சிப்பிக்குள் முத்து போல் பாதுகாத்த இக்கல்லூரி அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி எனும் நாமம் பெற்று இன்று வலயத்தில் ஒரேயொரு பெண்கள் தேசிய பாடசாலை வளர்ச்சியடைந்து வருகின்றமை ஜனரஞ்சகமானதாகும். இக்கல்லூரி மாணவிகளின் அடைவுகள் பாராட்டத்தக்கதாகும்.

இதற்காக இதுவரை காலமும் தங்களது சேவைகளை ஆற்றிய வேர் முதல் விழுதுகள் வரை பறைசாற்றப்பட வேண்டியவர்களே. இதனை இந்நூல் முடிந்தளவில் தாங்கியிருக்கின்றது என்பதை இட்டு பெருமிதமடைகின்றேன். இதனை நூலுருப்படுத்த பங்களிப்பு செய்த அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்தி, இப்பாடசாலையின் EPSI இணைப்பாளர் என்ற வகையில் எனக்கும் இதில் ஓர் சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நூலாசிரியருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திருமதி. அப்துல் காதர் நுஸ்ரத் நிலோபரா** (SLEAS II)
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை.
2024 ஜுலை 22.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் கல்லூரி உருக்கொண்ட காதை

கருவாட்டுக்கள் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அல்-மர்ஜான் முஸ்லிம் வித்தியாலயமாகிய கதை நம்மில் ஏராளமானோருக்குத் தெரியும். ஆனால் அல்மர்ஜான் முஸ்லிம் வித்தியாலயம் முஸ்லிம் மகளிர் கல்லூரியாக மாறிய கதை இன்னும் திருப்திகர மாகப் பதியப்படவில்லை. சம்மாந்துறை வாழ்வியலும் வரலாறும் என்ற நூலில் கல்வி வரலாறு பற்றிய குறிப்பில் சில தகவல்கள் மட்டுமே அதன் தலைப்புக்கேற்றவாறு பதியப்பட்டுள்ளன. மேலும் வெண் முத்தின் பருவ இதழ்களிலும் கால அமைதியுடன் சில முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆகவே, குறித்த கால இடைவெளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றிய எனக்கு தெரிந்த சிலவற்றை முன்னுரையாக வரைதல் எனது கடமை என நான் கருதுகின்றேன்.

அதிபர்மணி எம்.ஐ. கே. முஹம்மது அவர்கள் 1986 இல் சேவை முதிர்ச்சி அடைந்தபோது க.பொ.த. சாதாரண வகுப்புவரை இந்தப்பாடசாலையை உயர்ச்சியடையச் செய்து விட்டே விடைபெற்றார். எனினும் 1C தரத்திலேயே உத்தியோகபூர்வ மட்டத்தை இது கொண்டிருந்தது.

நகரப்புறப் பாடசாலைகளில் மூன்றாம் வகுப்பில் இருந்தாவது மாணவர்களுக்கு கட்டிட வசதியும் தளபாட வசதியும் மிகுந்த பற்றாக்குறைகளுக்கு மத்தியில் காணப்பட்டன. ஆனால், அல்மர்ஜான் மாணவர்கள் மூன்றாம் வகுப்புவரை தரையிலேயே உட்கார்ந்திருந்து கற்றனர். சில வகுப்புக்கள் நிரந்தரமாக மரத்தின் கீழேயே நடைபெற்றன. 1982ல் நான் இப்பாடசாலைக்-குச் செல்லும்போது ஆரம்ப வகுப்புக்களுக்குக் கற்பித்த ஏ.எம். இஸ்மாயில் ஸேர் (அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் தந்தை) மரத்துக்குக் கீழே ஸ்டாண்ட் இல்லாத கரும்பலகையை அதில் சாத்தி வைத்துக்கொண்டே கற்பித்தார். பாடசாலையின் அன்றைய நிலையை இது எடுத்துக் காட்டிற்று.

யூ.எம். மொஹிடீன்பாவா அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றபோது 1C பாடசாலையை மகா வித்தியாலயமாக மாற்றுவதற்கு பெரிதும் பாடுபட்டார். இவரின் காலத்திலேயே க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் தொடங்கப்பட மும்முரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்படி இருக்க யூ.எல். அலியார், எம்.ஏ. அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். AL வகுப்புக்கள் இவரின் காலத்தில் சீர்மைப்படுத்தப்பட்டன. அந்தக் கட்டத்தில் கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி மத்திய மகாவித்தியாலயம் தலைமைப் பாடசாலையாக்கப்பட்டு அதன் கீழ் நகரப்பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு அதன் அதிபர் கொத்தணி அதிபராகவும் ஆக்கப்பட்டார். எஞ்சிய பாடசாலைகளுக்கு அல்மர்ஜான் கொத்தணி தலைமைப் பாடசாலையாக ஆக்கப்பட்டு அதன் அதிபர் கொத்தணி அதிபர் ஆனார். இந்தக் கட்டத்தில் வட்டாரக்கல்வி அதிகாரி முறை ஒழிக்கப்பட்டு அவரின் கடமைகளை கொத்தணி அதிபர்களே மேற்கொண்டனர். இதனால் அல்மர்ஜானும் மகாவித்தியாலய அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் பலர் அல்மர்ஜானை மகாவித்தியாலயம் என்று அழைக்க ஆசைப்பட்டுக் கொண்டனர். தவறுதாலாகவோ அல்லது வேண்டுமென்றோ விளையாட்டுப்போட்டி அறிவிப்பாளர்கள்கூட அல் மர்ஜான் வித்தியாலயம் என்றே அழைத்தனர். இந்த வழக்கம் நீண்டகாலத்துக்கு நீடித்தது.

யூ.எல். அலியார் சம்மாந்துறை கோட்டத்துக்கான கல்விப் பணிப்பாளராக பதவி உயர்த்தப் பட்டமையால் ஐ. அலியார் சேர் அதிபரானார். ஆயினும், க.பொ.த. (உ/த) வகுப்புக்கள் வந்ததன் பின்னரும் வளப்பற்றாக்குறை பயங்கரமாக வளர்ச்சி அடைந்தது.

இந்தக்கட்டத்தில் இதனை பெண்களுக்கான பாடசாலையாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. சம்மாந்துறைக்கான மகளிர் கல்லூரி ஸ்தாபித்தலுக்கான ஒரு அமைப்புக் குழுவும் அமைக்கப்பட்டது. அதிபர்மணி எம்.ஐ.கே. முஹம்மத் தலைவராகவும் நான் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டோம். ஜனாப் ஏ.எச்.எம். அப்துல்லாஹ், ஜனாப் எஸ். ஏ. ராசிக், மௌலவி ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி, ஜனாப். ஏ. எல். எம்.யாசீன், ஜனாப். எம்.எஸ். ஹமீட், ஜனாப் ஏ.ஏ. கரீம், ஜனாப். ஐ.எம். இப்றாஹீம், ஜனாப். யூ.எம் முஸ்தபா, ஜனாப். ஏ.எல்.ஏ. கபூர், ஜனாப். ஏ.எம்.எம். ஷஹீத், ஜனாப். எம்.ஏ. சலாம், ஜனாப் ஏ.ஏ.ஸீ.எம். சலீம், இறையருட்கவி ஏ. இப்றாஹீம், ஜனாப் யூ.எம். இப்றாஹீம், ஜனாப். எம்.ஐ. பௌஸீன் உட்பட மேலும் பலர் அங்கத்தவர்களாகச் செயல் பட்டனர். ஆவணங்கள் அழிவுற்றமையால் செயற்பாட்டின் முக்கியத்துவம் கருதி ஞாபகத்தில் பதிந்திருந்த பெயர்கள் இணைக்கப் பட்டுள்ளன. இந்த சபை வாரம் இருநாட்கள் அமர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டன. அதில் முக்கியமாக இச்சபை மஜ்லிஸ் அஷ்-ஷூறாவுக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்தது. அது சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதனால் அரசியற் தலைமைகளான அமைச்சர் அப்துல் மஜீத் , தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் எம்.பி. ஆகியோர்களுக்கு இதனைக் காரியசித்தி ஆக்கித்தருமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டது. அவர்களும் தங்கள் தங்கள் அதிகார வலையமைப்பின் ஊடாக தொழிற்பட்டனர். இறுதியாக அன்றைய கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தமது சம்மாந்துறை விஜயத்தின்போது நமது MPCS வளாகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் ஒன்று கூடலில் வைத்து சம்மாந்துறை மத்திய கல்லூரியை தேசிய பாடசாலையாகவும், அல் மர்ஜான் மகா வித்தியாலயத்தை முஸ்லிம் மகளிர் கல்லூரியாகவும் பிரகடனம் செய்தார். உத்தியோகபூர்வ கடிதங்களுக்கு காலம் எடுத்தாலும் அல் மர்ஜான் தன்னை முஸ்லிம் மகளிர் கல்லூரியாக அன்றில் இருந்தே பூப்பு நீராட்டிக்கொண்டது.

எனவே இந்த வரலாற்றுப்பின்னணியை எழுதுவதற்கு வாய்ப்பளித்த நூலாசிரியருக்கும் அதன் குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**மூத்த கவிஞர் மன்சூர் ஏ. காதர்**
முன்னாள் பிரதிப்பதிவாளர்
ரஜரட்ட பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




## HM. அன்வர் அலி

சமூகத்தின் விடிவுக்காய்
சேவைகள் பல ஆற்றி
சரித்திரம் படைத்த
சாதனை செய் தலைமகனின்
நாமம் தனை எண்ணி
சித்தம் குளிர்கிறது
செம்மண் செறிந்திருந்த
சம்மாந்துறையூரின்
தெருவெங்கும் புகழ்மணக்க
இதயத்தில் வாழும் எம் ஜோதி
நீ வாழ்க பல்லாண்டு

ஆக்கம்: MH. ஜெஸீலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் செய்தி

காடுவெட்டுதல், நிலத் துப்பரவு, வேலி கட்டுதல், கொட்டில் அடித்தல், வியர்வை சிந்துதல், பணச் செலவு, ஆழமான கலந்துரையாடல்கள், கல்வித்தாகம் என்ற மனிதப் பண்புகளே இப்பாடசாலையின் பூர்வீக வளர்ச்சி பற்றிய கதைகளில் காணக்கூடிய முக்கிய அம்சங்களாகும். இந்தப் பன்புகளின் தியாகங்கள் மூலம் உருவாக்கப்பட்டதே எமது கல்லூரியாகும். 1950கள் சம்மாந்துறையின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட காலகட்டமாகும். இதற்கு முன்னர் 1860ல் வெஸ்லியன் மிஷன் பாடசாலை என்ற தாருல் உலூம் வித்யாலயம், 1912ல் ஆண்கள் பாடசாலையான (முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்), 1938ல் பெண்கள் பாடசாலையான முஸ்லிம் மகளிர் வித்யாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளே காணப்பட்டன. பின்னாளில் சம்மாந்துறையின் தென்பகுதியான 'கருவாட்டுக்கல்' பிரதேசத்தில் எமது வித்யாலயம் 1950ல் தோற்றமடைந்தது. டாக்டர் மீராலெப்பை அவர்களும் அவரது நண்பர்களும் இணைந்து பெற்றாரின் பங்களிப்புடன் தொடங்கிய எமது வித்தியாலயம் 93 மாணவர்களுடன் கருக்கொண்டது.

இன்று 1250 மாணவர்களுடன் தேசிய பாடசாலையாக தலை நிமிர்ந்து நிற்பதை எண்ணும் போது நாம் பூரிப்படைகின்றோம் அல்ஹம்துலில்லாஹ்.. இதன் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த 15 முன்னாள் அதிபர்களின் தியாகமும், ஆசிரியர்கள், பிரதி உதவி அதிபர்கள், கல்வி சாரா பணியாளர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் மதிக்கத்தக்கதாகும்.

உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி 2015ல் பல்கலைக்கழகத்திற்கு தகுதியான மாணவர் வீதம் 59%லிருந்து 2023ல் 87%மாக வளர்ச்சி அடைந்துள்ளது. சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளைப் பொறுத்தவரை உயர்தரம் கற்பதற்கு தகுதியான மாணவர்கள் 2015ல் 49% ஆக இருந்து 2022ல் 64% ஆக வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கு எமது அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியது. அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அன்மையில் வெளியான உயர்தரப் பெறுபேறுகளின்படி 40 மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழ தகுதிபெற்றமை ஒரு மைல்கல்லாகும். அதற்காக உழைத்த அதிபர் ஆசிரியர்களை பாராட்டுகின்றேன்.

இதேபோன்று கல்விப் புலத்தின் மற்றுமொரு பகுதியாகிய இணைப்பாடவிதானத்திலும் கடந்த ஐந்து தசாப்தங்களாக பல தேசிய விருதுகளையும் மாகாண விருதுகளையும் பெற்று எமது மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். இன்னும் எமது மாணவிகளை சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆளுமை உடையவர்களாக உருவாக்குவது எமது அடுத்த இலக்காகும்

ஒரு சமூகத்தின் தலைவிதியை சரியான பாதையை நோக்கி திசை மற்றும் காரணிகளில் கல்வியே முதன்மையானது. அல்ஜீரியாவில் இஸ்லாமிய சிந்தனையாளர் மாலிக்பின் நபி கூறுவது போன்று கல்வியும் எதிர்கால நோக்கமுமே சமூக மேம்பாட்டின் இரு சிறகுகள். அதை இழக்கின்ற சமூகம் எந்த மாற்றத்தையும் நோக்கி நகர முடியாது.

**HM. அன்வர் அலி**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாக்கக் குழு

| | |
|---|---|
| Mr. HM. அன்வர் அலி (அதிபர்) | பிரதம ஆசிரியர் |
| Mr. ARM. ஹஸ்ரப் (நளீமி) | தலைவர் |
| Mr. M M. நௌபல் (நளீமி) | பொருளாளர் |
| Mr. ACM. முஸ்தபா | செயலாளர் |
| Mrs. MH. ஜெஸீலா | உதவி அதிபர் |
| Mrs. A. சித்தி சுஹைறா | சிரேஸ்ட ஆசிரியை |
| Mr. CM. தில்சாத் | சிரேஸ்ட ஆசிரியர் |
| Mrs. UL. பஸ்லூனா | சிரேஸ்ட ஆசிரியை |
| Mr. MI. றிப்கான் | ஆசிரியர் |
| Mr. AM. நௌசாட் | KKS |
| Mr. MI. அஸ்மத் பானு | DO |

# ஆலோசனைக் குழு

| | |
|---|---|
| Mr. ARM. உவைஸ் நளீமி | DP |
| Mr. ALA. சலீம் | DP |
| Mr. AM. றிபாஸ் | AP |
| Mrs. AM. சிறாஜுன் நிஸா | AP |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக்கக் குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**அத்தியாயம் - I**
(1950 - 1970)

01. பூர்வீகம்
02. ஸ்தாபகர்கள் பற்றி குறிப்புகள்
03. அதிபர்கள் வரலாறு
    i. ஏ.எம். மீராலெப்பை
    ii. ஏ. அஹமதுலெப்பை
    iii. எம்.ஐ. கோஸ் முகம்மது
    iv. கே. அப்துல் மஜீட்

**அத்தியாயம் - II**
(1970 - 2002)

i. கே. அப்துல் றசூல்
ii. தியாகப் பணி – வெண்முத்து 1973
iii. யு.எம். முகைதீன்
iv. யு.எல். அலியார்
v. ஐ. அலியார்
vi. எஸ்.எச்.எம். முஸ்தபா

**அத்தியாயம் - III**
(2002 - 2024)

i. கே.எம்.எஸ்.எம். தமீம்
ii. கே.எல். அப்துல் தசூல்
iii. ஜனாபா அபீறா சலீம்
iv. யு.எல். லாபிர்
v. எம்.ஐ. மீரா முகைதீன்
vi. எச்.எம். அன்வர் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - IV**
(2002 - 2024)

i. பாடசாலையின் ஒழுக்க விழுமியங்கள்
ii. தேசிய மாணவர் பாராளுமன்றம்
iii. மதர் ஸ்ரீ லங்கா செயற்திட்டம்
iv. வெண்முத்தே ஒளிர்கவே
v. பாடசாலையின் வளர்ச்சிப்படிகள்
vi. இணைப்பாடவிதான செயற்பாடுகள்
vii. மர்ஜானின் உயர்தரப்பிரிவு
viii. மர்ஜானே நீ வாழ்க
ix. அல்-மர்ஜான் எனும் வெண்முத்து
x. அல்-மர்ஜானும் சுற்றாடல் முன்னோடிக் கழகங்களும்
xi. அதிபர்களின் சேவைக்காலம்
xii. மாணவர் தொகை பற்றிய குறிப்புகள் (1950 - 2024)
xiii. GCE A/L அடைவுமட்ட விளக்கப்படம்
xiv. GCE O/L அடைவுமட்ட விளக்கப்படம்
xv. பாடசாலையின் கட்டிடங்களின் வரலாறு
xvi. Staff List - 2024
xvii. பழைய மாணவர் குறிப்புகள் (1989 - 2024) (பட்டதாரிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - I

Principal
KM/ST/ Al-Marjan MLC (N.S)
Sammanthurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 01

# பூர்வீகம்

கிழக்கிலங்கையின் புகழ்பூத்த கிராமங்களில் ஒன்றான சம்மாந்துறை பல்வேறு பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வகையில் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை கலாசாரம் போன்ற துறைகளில் இந்த நூற்றாண்டின் வரலாற்றில் அது பதியப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம் கிராமங்களில் முதன்மை பெறுகின்ற சம்மாந்துறையின் கல்வி வரலாறும் சுவாரஸ்யமானது. மெதடிஸ்தமிசன் பாடசாலை (தாருல் உலூம் - 1860), சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (1912), சம்மாந்துறை மகளிர் வித்தியாலயம் (1938), மட்/கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (1950) என்ற நான்கு பாடசாலைகளே அப்போது சம்மாந்துறையின் கல்விக்கூடங்களாகும்.

சம்மாந்துறையின் சமூக கட்டமைப்பானது பிரித்தானியாவில் காணப்பட்ட மானியமுறை சமூக அமைப்பை ஒத்ததாக (Feudal society) அப்போது இருந்தது. நிலச்சுவாந்தாரான போடிமார், கூலித் தொழிலாளிகள் (வயற்காரன்) என்ற இரண்டு வர்க்கங்கள் அப்போதைய சமூக சூழலில் வலுவுற்று இருந்தன.

இந்த சமூக பின்புலத்தில் சம்மாந்துறையின் தென்பிரதேசமான கருவாட்டுகல் கிராமிய விவசாயிகளை உள்ளடக்கிய பிரதேசமாக காணப்பட்டது. காடுகளும் சிறிய வட்டப் பாறைகளும் நிரம்பிய இப்பிரதேசம் சம்மாந்துறையின் மேட்டு நிலப் பிரதேசமாகும். சம்மாந்துறைப் பட்டிணத்தின் இப்பகுதியில் வட்ட வட்டக் கற்பாறைகள் இருந்ததினால் "கரை வட்டக்கல்" என்ற ஒரு பெயரும் இப்பிரதேச மக்களால் கூறப்பட்டது. மேலும் இப்பிரதேசத்தில் வலை போட்டு பிடித்து வரும் மீன்களை காய வைத்து வந்ததினால் "கருவாடு காய வைத்த கல்" என்றும் வெண்முத்து (1973) குறிப்பிடுகின்றது.

இவ்வாறான ஒரு சமூக சூழலில் இப்பிரதேச மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கத்தில் சம்மாந்துறையின் முதுசங்களில் மர்ஹூம் Dr. எம்.எம். மீராலெப்பையின் தலைமையில் அவரது இல்லத்தில் ஒரு கூட்டம் இடம்பெற்றது. இதில் அவரது நண்பர்களான மர்ஹூம் அலி லெப்பை போடியார், மர்ஹூம் எம்.ஐ.எல். பக்கீர் தம்பி (ஈழுமேகம்), மர்ஹூம் எம்.ஐ. கோஸ் முகம்மது (அதிபர்), ஏ.எம். மீராலப்பை (அதிபர்), ஐ. சுலைமாலெப்பை ஆகிய ஐந்து பேரும் கலந்தாலோசனை செய்தனர். இப்பிரதேசத்தில் கல்வியின் முக்கியத்துவம் பற்றி Dr. எம்.எம். மீராலெப்பை அவர்களுக்கு எடுத்துரைத்தனர். இதன் விளைவாக இப்பிரதேசத்தின் காட்டுப் பகுதியை பொதுமக்களின் உதவியுடன் சிரமதானம் செய்து 50' நீளம் 20' அகலம் கொண்ட ஓலைக் கட்டிடம் ஒன்றை ஸ்தாபித்தனர். இதற்காக 40 ற்கும் மேற்பட்ட மக்கள் பண உதவியும் சரீர உதவியும் நல்கினர். இவ்வாறான ஒரு சமூக பங்களிப்புடன் இப்பாடசாலையின் நிலம் துப்புரவு செய்யப்பட்டு கட்டிடமும் அமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தைப் பெற்றுக் கொள்வதில் அப்போதைய சம்மாந்துறைப்பற்றுக் காரியதரிசி மர்ஹூம் எ.எம்.எம் யூசுப் அவர்களும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் கேட் முதலியார், எம்.எஸ் காரியப்பர் அவர்களும் உறுதுணையாக இருந்தனர். மர்ஹூம் எம்.எஸ் காரியப்பர் அவர்கள் சம்மாந்துறையின் கல்வி நிலையங்களை அமைப்பதில் முன்நின்று உழைத்த பெருந்தகை என்பது கவனிக்கத்தக்கதாகும். இருந்த பொழுதும் சில பொதுமக்களின் எதிர்ப்புகளும் அக்காலத்தில் தலை தூக்கின. மக்கள், குடியிருப்பு நிலங்களாக பாவிக்கும் அவற்றை நோக்குடன் இவ் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கலாம் என நினைக்கிறேன்.

1950.07.29 ஆம் திகதி கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் திரு. வி.எஸ்.எம். மெல், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. கே. கிருஸ்ணப்பிள்ளை, சம்மாந்துறை டி.ஆர்.ஓ. யூசுப் போன்றோர் இப்பாடசாலையை திறந்து வைத்தனர். இப்பாடசாலை கட்டிடத்தை இலவசமாக கட்டிக் கொடுத்த கிராமத் தலைவர்களையும் இம்முயற்சியில் ஊக்கத்தோடு பணியாற்றிய மர்ஹூம் டாக்டர் மீராலெப்பை மற்றும் அவரது நண்பர்களையும் கிழக்கு மாகாண வித்யாதிகாரி திரு. கே. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் பாராட்டிப் பேசினார். கிழக்கு மாகாண வித்யாதிகாரி (No. EP/D,945) 14.8.50 கட்டளைப்படி மர்ஹூம் ஏ.எம். மீராலெப்பை ஆசிரியர் பதில் தலைமையாசிரியராக கடமையை ஏற்றுக்கொண்டார் (Log Book 01.09.1950). 98 மாணவர்களுடன் 01.09.1950 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் முதல் நாள் மதியபோசனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தலைமையாசிரியரான மீராலெப்பை அவர்கள் இப்பாடசாலையின் நிலத்தை பண்படுத்தி இந்நிலத்தை பாடசாலைக்கு சொந்தமாக்குவதில் அயராது உழைத்தார். பாலர் வகுப்புடன் ஆரம்பமான இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு சம்மாந்துறையின் கல்வி வரலாற்றில் முக்கிய திருப்புமுனை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] கல் அந்நூர் முஸ்லீம் கலவன் [illegible]

1.9.50

இந்தப்பாடசாலை 29.7.50 இல் கிழக்கு[illegible]
அதிபர் கௌரவ V.S.M. De மெல் C.C.S. அவர்களால்
திறந்துவைக்கப்பட்டது.

இந்தப்பாடசாலைக்கட்டிடத்தை
இலவசமாகக் கட்டிக் கொடுத்த கிராமத்தவர்களை
இம்முயற்சியில் உணக்கமோடுழைத்தவர்களாக, ஜனாப்
M.M. மீராலெவ்வை ட்ரஸ்டியார், A.M. மீராலெவ்வை [illegible]
I. சுலையுமாலெவ்வை ஆசிரியர், M.I. கோசுமுகம்மது ஆசிரியர்
M.I.L. [illegible]த்தம்பி ஆசிரியர் ஆகியவர்களையும் இங்கு
சமூகம் கொடுத்த கிழக்குமாகாண வித்தியாதிகாரி திரு.
K. கிருஷ்ணபிள்ளை அவர்கள் பாராட்டிப் பேசினார்.

இப்பாடசாலை வளர்ச்சியில் ஆர்வங்காட்டி
உணக்கமோடுழைத்து எல்லாவகையிலும் ஒத்துழைக்கு[illegible]
[illegible] பெற்றார் அனைவரையும் பாராளுமன்ற அங்கத்தவர் [illegible]
முதலியார் M.S. காரியப்பர் அவர்களும், காரியாதிகாரி ஜனாப்
M.A.M. யூசுப் அவர்களும், வட்டார வித்தியாதரிசகர்
திரு S. விதுவலிங்கம் அவர்களும் வேண்டிக் கொண்டனர்.

இன்று காலை 8.00 மணிக்கு கிழக்குமாகாண வித்தி
யாதிகாரியவர்களின் No. EP/D 945 / 14.8.50 கடிதப்படி
A.M. மீராலெவ்வை ஆசிரியராகிய நான் பதில் தலைமை
யாசிரியராக இங்கு கடமையேற்றுக் கொண்டேன்.

A.M. Meera Lebbai
1/9/50
acting Head master

1.9.50 இன்று பகல் [illegible] மணிக்கு ஆரம்பிக்கப்
பட்டு சேர்க்கப்பட்ட பிள்ளைகள் 98, இவர்களுக்கு
இலவச போசனம் வழங்கப்பட்டது.

A.M. Meera Lebbai
1/9/50
acting Head master

1/9/50 இன்று இப்பாடசாலை 98 மாணவர் [illegible]
[illegible]ப்பட்டது.

M.I. Yoosuf

[illegible] இன்று இப்பாடசாலையில் [illegible] மணிக்கு [illegible] 116/130 [illegible]

M.I. Yoosuf

2.9.50 இன்று முதல் 23.9.50 — 28.9.50 வரை பதினைந்து [illegible]
[illegible] கொடுக்கப்பட்டது. A.M. Meera Lebbai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்தாபகர்கள் பற்றிய குறிப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையின் புகழ்பெற்ற
பெண்கள் கல்லூரியான எமது பாடசாலையின்
உருவாக்கத்திற்கு அடித்தளமிட்ட

# டாக்டர். எம்.எம். மீராலெப்பை (RMO)

(1907 - 1984)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர். எம்.எம். மீராலெப்பை

(1907 - 1984)

இவர் 1907ம் ஆம் ஆண்டு காலி ஹாஜியாரின் மகனான ஆரைப்பற்று ஹாஜியாரின் மகனாக சம்மாந்துறையில் பிறந்தார். அப்போதிக்கர் (AMP) டாக்டர் பட்டம் பெற்றதும் அப்துல் மஜீது வன்னியனாரின் மகளை திருமணம் செய்தார். இவர் தனது தொழிலில் இருந்து 1948ல் ஓய்வு பெற்றதும் ஆத்மீகம், கல்வி போன்ற துறைகளில் தனது கவனத்தை செலுத்தினார். இவர் சம்மாந்துறையின் முதல் பதிவு செய்யப்பட்ட வைத்தியர் (RMO)ஆக பட்டம் பெற்றார். Dr. AMA. அஸீஸ் அவர்களினால் உருவாக்கப்பட்ட கல்முனை கல்விச் சங்கத்தின் செயலாளராக இவர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். 1950கள் சம்மாந்துறையின் சமூக மேம்பாட்டின் ஒரு பொற்காலமாகும். இது ஒரு மாறும் கால கட்டமாகும் (Transision Period) இக் காலத்திலேயே சம்மாந்துறையின் பிரபல்யமான பாடசாலைகளுக்கு அடித்தளம் இடப்பட்டது.

இந்த வகையில் டாக்டர் மீராலெப்பையின் தலைமையில் சம்மாந்துறையின் தென்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எமது வித்தியாலயம் காடுகளால் நிரம்பிய மலை சார்ந்த பிரதேசம். இதனை துப்புரவு செய்து தனது நண்பர்களுடன் எல்லையிட்டு கொட்டில் கட்டி பாடசாலை அமைத்தார். மேலும் அல்-மர்ஜான் ஆரம்பத்தில் “கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை” எனும் பெயரிலேயே வழங்கியது. இதனை உருவாக்கியது மட்டுமன்றி, கைர் பள்ளி மையவாடி, தாருல் ஹசனாத் மனனக்கல்லூரி, மாவடிப் பள்ளி மர்கஸ் (தப்லிக்) பள்ளிக்கான காணியை பெற்றுக் கொடுத்தல் என்பன இவரது முக்கியமான பணிகளாக பார்க்கப்படுகின்றன. வைத்தியத்துறையை விட சமூகவியல் துறையில் இவர் காட்டிய அக்கறைகள் கனதியானது. 1960களில் சம்மாந்துறையின் சரித்திரக் குறிப்புகளை தொகுத்து எழுதி நூலாக்கம் செய்ய வேண்டும் என அதீத அக்கறை கொண்டிருந்தார். இவரது சமூகவியல் பார்வை (Anthropological View) மற்றும் இவரது சமூக சேவைகள் பற்றி மேலும் எதிர்கால சந்ததிகள் ஆய்வுக்குட்படுத்தல் வேண்டும்.

டாக்டர் மீராலெப்பை வக்பு சபை உறுப்பினராக இருந்ததுடன் சம்மாந்துறையின் நம்பிக்கையாளர் சபையின் தலைவராக 10 வருடங்கள் கடமையாற்றினார். தனது சொந்தக் காணியை (14 1/2 ஏக்கர்) தாருல் ஹசனாத் குர்ஆன் மனனக் கல்லூரிக்கு எழுதி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிய மர்ஹூம் டாக்டர்.எம்.எம் மீராலெப்பை தனது 77 வது வயதில் 1984 இல் இறையடி எய்தினார். அல்லாஹ் இவரது சமூகப் பணிகளை பொருந்திக் கொள்வானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. சுலைமாலெப்பை
## (1926 – 1977)



இவர் 1926 இல் சம்மாந்துறையில் பிறந்தார். மெதடிஸ்த மிசன் பாடசாலையில் (தாறுல் உலூம்) ஆரம்பக் கல்வியையும் இடைநிலை கல்வியை சம்மாந்துறை அரசினர் ஆண்கள் பாடசாலையிலும் கற்றார்.

பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரியாக கற்று, பின்னர் அனுராதபுர பாடசாலை ஒன்றில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

1969ல் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் நீண்ட காலம் பணியாற்றினார். எமது அல்-மர்ஜான் ஸ்தாபிக்கப்படுகின்ற ஆரம்ப காலங்களில் (1950) டாக்டர் மீராலெப்பையுடன் இணைந்து பாடசாலையின் உருவாக்கத்திற்காக கடுமையாக உழைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஏ.எம். மீராலெப்பை
## (01.09.1950 – 30.04.1951)



இப்பாடசாலையின் முதல் அதிபர் என்ற பெருமைக்குரியவர். இப்பாடசாலை ஸ்தாபிப்பதற்கு டாக்டர் மீராலெப்பையுடன் இணைந்து முன் நின்று உழைத்தவர். 01.09.1950 - 30.04.1951 வரையுள்ள 07 மாத குறுகிய காலத்தில் இப்பாடசாலையின் அதிபராக பணிபுரிந்த இவர், மீண்டும் இவ்வித்தியாலயத்தில் அதிபராக 1973 இல் கடமை ஏற்றார். 1973 - 1976 வரை இப்பாடசாலையில் அதிபராக கடமை புரிந்தமை இவரது ஆளுமைக்கு எடுத்துக் காட்டாகும். கே.ஏ.றசூல் அதிபர் எம்.ஐ.கே.முஹம்மட் அதிபர் பின்னர் மீண்டும் மீராலெப்பை அதிபர் என்று ஒரு சுழற்சியில் இவர்கள் அதிபராக வந்தமையானது, இவர்களது நிர்வாக திறமைக்கான ஒரு சமூக அங்கீகாரம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏம்.ஐ.எல். பக்கீர் தம்பி (ஈழ மேகம்)

(1907 - 1984)



1923.05.06ம் திகதி பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை சது/மிஷன் (தாறுல் உலூம்) பாடசாலையிலும் பின்னர் அட்டாளைச்சேனை போதனா பாடசாலையில் SSC வரைக்கற்று சித்தியடைந்தார். 1947.01.01ம் திகதி வரையும் ஆசிரியர் நியமனம் பெற்று 1983.05.05ம் திகதி வரையும் சுமார் 36 வருடங்கள் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு தனது 60வது வயதில் ஓய்வு பெற்றார்.

முதன் முதலில் மேடைப்பேச்சின் மூலம் அறிமுகமான இவர் சிறந்த மேடைப்பேச்சாளர், கவிஞர். இவரது பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மாணவ சமுதாயத்தை மிகவும் கவர்ந்தன. இவர் பேசுகின்ற கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடுவர். எழுத்திலும் பேச்சிலும் அடுக்கடுக்காக வந்து விழுந்த எதுகை மோனையும் இளைஞர் சமுதாயத்தின் மனதை கொள்ளை கொண்டன. அவர் பின்னால் ஒரு இளைஞர் சமுதாயத்தை உருவாக்கி விட்டு மறைந்துள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல கவிதைகளை எழுதி தங்கப்பதக்கம் பெற்றவர். 1961ல் தமிழகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு (காயல்பட்டினம்) பல கவியரங்குகளில் கலந்து தமது புலமையை வெளிப்படுத்தியவர். இவரது பேச்சாற்றலால் கவரப்பட்ட அறிஞர் அண்ணா ஈழமேகம் எனும் பட்டத்தை வழங்கி வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகவும். 'காயல் மேகம், நாவலர்' எனும் சிறப்பு பட்டங்களும் பொதுமக்களால் வழங்கப்பட்டன. இவரது மாணவர்களே பாவலர் பஸீல் காரியப்பர், ஏ.சி. இஸ்மாலெப்பை அதிபர் மாறன் யூ. செயின் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1950களில் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கான மூலக்கற்களில் ஈழமேகம் முக்கியமானவர். தனது 61 வது வயதில் 1985இல் இறையடி எய்தினார். அல்லாஹ் இவரை பொருந்திக் கொள்வானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஐ. கோஸ் முஹம்மது

அதிபர்



1926 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி அதிபர் மணி கோர்ஸ் முஹம்மது பிறந்தார்கள். இவர் சம்மாந்துறை மெதடிஸ்த் மிஷன் (தாறுல் உலூம்) பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை கற்று, காத்தான்குடி மத்திய கல்லூரியில் ஒன்பதாம் ஆண்டு முதல் கற்று 1947 ஆம் ஆண்டு SSC சித்தியடைந்தார்.

'அதிபர் மணி' அவர்கள் சம்மாந்துறையின் உயர் பாடசாலைகளான மத்திய மகா வித்தியாலயம், அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி என்பவைகளில் அதிபராக நீண்ட காலம் (21 வருடங்கள்) சேவையாற்றி இப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார்.

சம்மாந்துறையில் 1950ம் 1954ம் ஆண்டுகளில் 43 ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்கி அவைகளை பகிர்ந்து கொடுத்தார். சம்மாந்துறை பெரிய சங்க செயலாளராக நீண்ட காலம் பணியாற்றினார். 1986இல் ஓய்வு பெற்ற இவர் பல கல்விப் பணிகளை ஆற்றியுள்ளார். முஸ்லிம் மத்திய கல்லூரி, அல்-மர்ஜான் தேசிய பாடசாலை உருவாக்கம் வளர்ச்சி என்பவற்றில் தீவிர கவனம் செலுத்தி புதிய கல்விப் பரம்பரையை உருவாக்கி உள்ளார். தனது 87 வது வயதில் இறையடி எய்தினார். அல்லாஹ் இவரை பொருந்திக் கொள்வானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அல்லி லெவ்வை போடியார் (வ.வி)

சம்மாந்துறையில் புகழ்பெற்ற குழட்டுப் போடியாரின் மகனான அல்லி லெவ்வை போடியார் 1895 ம் ஆண்டில் பிறந்தார். இவர் சேனை வட்டையின் வட்டை விதானையாக மிக நீண்ட காலம் கடமை புரிந்தார் 1920ம் ஆண்டளவில் திருமணம் முடித்தார். சம்மாந்துறையில் ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவு சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் தலைவராக முஹம்மது அலி போஸ்ட் மாஸ்டர் தெரிவு செய்யப்பட்டபோது அல்லி லெவ்வை போடியார் அதன் உப தலைவராக நீண்ட காலம் பதவி வகித்தார்.

1950 ஆம் ஆண்டு சம்மாந்துறை மர்ஜான் வித்தியாலயம் டாக்டர் மீராலெவ்வையின் தலைமையில் உருவானபோது பாடசாலை அமைப்புக்குழுவில் அல்லிலெவ்வை போடியாரும் இணைந்து செயலாற்றினார். மேலும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையானது மிக நீண்ட காலம் பரம்பரை பரம்பரையாக தெரிவு செய்யப்படுவதை எதிர்த்து மட்டக்களப்பு நீதி மன்றத்தில் தொடரப்பட்ட ஆ47-ம் இலக்க வழக்கை நடத்திய குழுவின் தலைவராக இருந்த செயல் பட்டு இறுதியில் வெற்றி பெற்றவர் என்பதை மறக்க முடியாது. இவர் அல்ஹாஜ் ALA.கபூர் (ISA)அவர்களின் தகப்பன் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏ.எம். மீராலெப்பை

அதிபர்
(01.03.1973 - 07.01.1976)

பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற பெருமைக்குரியவர். பதில் அதிபர் ஏ.எம்.மீராலெப்பை அப்போதைய கல்விமான்களில் முக்கியமானவர். இவர் இப்பாடசாலையில் ஸ்தாபகர்களில் முக்கியமானவர்.

இப்பாடசாலையின் ஆரம்பப் பிரிவை வலுவூட்டுவதில் முன் நின்று உழைத்தார். டாக்டர் மீராலெப்பையின் உற்ற நண்பரான இவர் பாலர் வகுப்புகளில் பாடம் புகட்டி அக்காலத்து மாணவர்களில் எண், எழுத்து, வாசிப்பு போன்ற அடிப்படை தேர்ச்சிகளை வலுவூட்டுவதில் தனது கற்பித்தல் பணியினை மேற்கொண்டதுடன் பாடசாலையின் நிர்வாக கடமைகளையும் சிறப்பாக மேற்கொண்டார். இவரது இரண்டாவது பதவிக் காலம் 01.03.1973 தொடக்கம் 07.01.1976 வரையானதாகும். இவரது பதவிக் காலத்தில் பாடசாலையின் அடிப்படை தேவைகள் பல நிறைவேற்றப்பட்டன.

இவர் பின்னாளில் பிறப்பு, இறப்பு பதிவாளராக கடமை புரிந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏ. அஹமதுலெப்பை

## அதிபர்

(01.05.1951 - 28.02.1959)

1951.05.01 ஆம் ஆண்டு மருதமுனையைச் சேர்ந்த ஏ. அஹமதுலெப்பை என்பவர் தலைமை ஆசிரியராக தனது கடமையை ஏற்றுக் கொள்கிறார். முன்னர் கடமையாற்றிய பதில் அதிபர் ஏ.எம். மீராலெப்பை சம்மாந்துறை அரசினர் ஆண்கள் பாடசாலைக்கு (கமு/சது/முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்) மாற்றலாகிச் செல்கிறார். இவர் இப்பாடசாலையில் மேற்கொண்ட முதல் பணி மாணவர்களின் வரவை அதிகரிப்பதாகும். அந்த வகையில் 191 மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்திருந்தாலும் 119 மாணவர்களே பாடசாலைக்கு சமூகம் கொடுத்து வந்தனர். இதனால் பொதுப்பிரசாரம் பாடசாலை சமூகத்தால் மேற்கொள்ளப் பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் ஊர்வலமாக வரவு சம்பந்தமான அட்டைகளுடன் ஒவ்வொரு தெருக்களிலும் ஊர்வலம் சென்றனர்.

இந்நிகழ்வை கண்ட பெற்றோர் பிரதான சந்திகளில் கூடி நின்று ஆனந்தம் அடைந்தனர். வரவு உத்தியோகத்தர்கள் (Attandence Registrar) பாடசாலைக்கு வருகை தந்து உபதேசம் புரிந்தனர் (Log Book - 1951 P-8). இதன் விளைவாக பல மாணவர்கள் பாடசாலையில் இணைந்தனர். மாணவர் வரவும் அதிகரித்தது. இவரது அரும் முயற்சியினால் பாடசாலை கட்டிடம் நிரந்தர கட்டிடமாக கட்டப்பட்டது. பாடசாலைக்கு தேவையான மலசலக்கூடம், கிணறு ஆகியவை அமைக்கப்பட்டன. 191 மாணவர்களுடனும் மூன்று ஆசிரியர்களுடனும் இயங்கி வந்த பாடசாலை மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்தது. பாடசாலையைச் சுற்றி தற்காலிக வேலி அமைக்கப்பட்டது, பல பயிர்களும் செய்கை பண்ணப்பட்டது.

1958 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25ஆம் நாள் வி. தர்மசங்கரி வித்தியாதரிசி அவர்கள் கல்லோயா அபிவிருத்தி சபை அதிகாரியிடம் இருந்து பாடசாலைக்குரிய மூன்று ஏக்கர் இரண்டு ரூட் 14 பேர்ச் பரப்புள்ள நிலத்தை அதிபரிடம் ஒப்படைத்தார். இவ்வாறு பாடசாலையின் அடிப்படை வசதிகள் மெல்ல மெல்ல ஏற்படுத்தப்பட்டன. அதிபர்கள், ஆசிரியர்கள் தியாகத்தினாலும், வியர்வையினாலும் அல்-மர்ஜான் கட்டியெழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் கனிஷ்ட பிரிவு வகுப்புகளை ஆரம்பிப்பது தொடர்பான முயற்சிகளைச் செய்தனர். இவரது 08 வருட காலத்தில் பாடசாலையில் பல அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்.ஐ. கோஸ் முகம்மது

அதிபர்

01.03.1959 - 10.03.1961

17.08.1961 - 14.07.1970

08.01.1976 - 15.05.1986

1926 ஆம் ஆண்டு சம்மாந்துறையில் பிறந்த இவர் சம்மாந்துறையின் கல்வி வரலாற்றில் முக்கிய தடம்பதித்தவர். எமது அல்-மர்ஜான் தேசிய பாடசாலை அப்போதைய கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபராகவும் மற்றும் சம்மாந்துறை அரசினர் ஆண்கள் பாடசாலையின் உதவி ஆசிரியராகவும் (1949) பணிபுரிந்து பின்னாளில் (1973 – 1976) அதே பாடசாலையில் அதிபராகவும் பணியாற்றினார். 1947 இல் SSC பரீட்சையில் சித்தி அடைந்து 1947 தொடக்கம் 1948 வரை அட்டாளச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப் பட்டு உதவி ஆசிரியரான ஈழமேகம் பக்கீர் தம்பி ஆசிரியருடன் சம்மாந்துறை ஆண்கள் பாடசாலையில் (முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்) தமிழ், சரித்திரம், குடியுரிமை, கணிதம் போன்ற பாடங்களை கற்பித்து புதிய கல்விச் சமூகம் ஒன்றினை கட்டியெழுப்பினார்.

ஜனாப் கோஸ் முகம்மது அதிபர் அவர்கள், அல்-மர்ஜான் வித்யாலயத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான டாக்டர் மீராலெப்பை, மர்ஹூம் எம்.எஸ் காரியப்பர் (MP) போன்றவர்களுடன் நெருங்கி பழகியவர் இக்கல்லூரியை ஸ்தாபிப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும் கடுமையாக உழைத்தவர். இவரது பதவிக்காலத்தை மூன்று அத்தியாயங்களாக நாம் ஆய்வு செய்யலாம்.

முதல் அத்தியாய காலம் 01-03-1959 தொடக்கம் 10-03-1961 வரை (02 வருடங்கள்)
இரண்டாவது அதிபர் காலம் 17-08-1961 தொடக்கம் 14-07-1970 (09 வருடங்கள்)
மூன்றாவது அதிபர் காலம் 08-01-1976 தொடக்கம் 15-05-1986 (10வருடங்கள் 04 மாதங்கள்)

மொத்தமாக அல்-மர்ஜானில் (21 வருடங்கள் 03 மாதங்கள்) சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தனது கல்வி பணியினை ஆற்றியுள்ளார். மேலும் அல்-மர்ஜானின் வளர்ச்சியில் அதிபர் பணியின் பங்களிப்பை நாம் பின்வருமாறு பட்டியல் இடுவதன் மூலம் தெளிவு பெறலாம்.

01. ஆரம்பப் பிரிவாக இருந்த பாடசாலையை தரம் 09 வரை வளரச் செய்தார்.
02. G.C.E (O/L) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாணவர்கள் இணைந்தது மட்டுமன்றி A/L வகுப்புக்களுக்கும் தகுதி பெற்றனர்.
03. கட்டிட வசதிகள், பாடசாலை மைதானம் போன்றவற்றை செப்பனிட்டு புனர்நிர்மாணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பாடசாலையைச் சுற்றி எல்லை வேலியிட்டார். இதற்கு பெற்றார்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை பெற்றார்.

05. பாடசாலையின் முன் பக்கம் மதில் அமைத்தல்.

06. "கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன்" பாடசாலை என்பது "அல்-மர்ஜான் வித்யாலயாலம்" (1965) என இவரது காலத்தில் பெயர் மாற்றம் அடைந்தது.

07. கலை கலாசார போட்டிகளில் மாவட்ட ரீதியான, தேசிய ரீதியிலான வெற்றிகளை பெற்றது.

08. விஞ்ஞான கூடங்கள் அமைக்கப்பட்டது.

09. "அல்-மர்ஜான் வித்யாலயாலம்" எனும் இரும்பிலான பெயர் பலகையும் ரூபா. 1600 செலவிலான கதவும் (1966) போடப்பட்டது.

10. பெற்றார் - ஆசிரியர் சங்கம், பொதுமக்கள் எனும் பாடசாலை சமூகத்தை வலுவூட்டி பல சேவைகளைப் பெற்று , எமது கல்விக் கூடத்தைக் கட்டி எழுப்பினார்.

சம்மாந்துறையின் அரசியல் தலைமைகளோடு நெருக்கமான உறவை கொண்டிருந்தார். மர்ஹூம் எம்.ஏ. அப்துல் மஜீத் (முன்னாள் அமைச்சர்), மர்ஹூம் எம்.எஸ். காரியப்பர் (முன்னாள் அமைச்சர்) மர்ஹூம் யு.எல்.எம். முஹைதீன் (முன்னாள் பிரதி அமைச்சர்), மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் (முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும்) மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் (பிரதி அமைச்சர்) போன்றோரின் நட்புறவால் சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்திக்கு குறிப்பாக எமது கல்லூரிக்கு பல கட்டிடங்களையும் ஆசிரியர்களையும் கொண்டு வந்தார். இவரை சுற்றி புகழ் பூத்த ஆசிரியர் வட்டம் ஒன்றும் காணப்பட்டது.

மர்ஹூம் ஏ.எச்.எம் அப்துல்லா, மர்ஹூம் ஏ.எல்.எம். யாசீன், மர்ஹூம் ஏ.ஏ கித்ர் முகம்மது, மர்ஹூம் எம்.எஸ். ஹமீட், மர்ஹூம் எம்.ஏ.சி.எம். மக்கிம், மாறன் யூ. செயின், மர்ஹூம் பாவலர் பஸில் காரியப்பர், மர்ஹூம் ஏ.எல்.ஏ. கபூர் போன்ற எமது மண்ணின் முத்துக்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர்.

அதிபரின் முகாமைத்துவக் குணாம்சம் சற்று வித்தியாசமானது. ஆசிரியர்களுடன் கடுமையான போக்கை கொண்டிருந்தார். சில வேளைகளில் பெண் ஆசிரியர்கள் 'பிரம்படி' வாங்கிய சந்தர்ப்பங்களும் சுவாரஸ்யமானவை. பெரும்பாலான ஆசிரியர்கள் இவரது மாணவர்களாக உள்ளதனால் இவரது சுபாவமும் நடத்தைகளும் அவர்களால் கவனத்திற் கொள்ளப் படவில்லை.

கம்பீரமான தோற்றம், வெண்ணிற ஆடைகள், இலக்கிய நயம் கொண்ட பேச்சுக்கள் கோஸ் முகம்மது சேரின் ஆளுமைகளாகும். சமூக அங்கீகாரம் பெற்ற இவரது நிர்வாகம், புதிய கல்வி பரம்பரையை தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றியது எனலாம். இவர் ஓய்வு பெறும் காலத்தில் (1986) "அதிபர் மணி" எனும் பட்டத்தை "அல்-மர்ஜான் முஸ்லிம் வித்யாலய ஆசிரியர் குழாம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1986 ஓய்வுபெறும் நிகழ்வில் மனைவியுடன் அழைத்துவரப்படுகிறார்
அதிபர் மணி MIK. முகம்மது. அருகில் ALM. யாசீன் Sir

மாணவர்கள்
1985



மாணவிகள்
1985



பர்தா உடை இப்பிராந்தியத்தில் முதலில்
ஆரம்பிக்கப்பட்டது அல்-மர்ஜான் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே. அப்துல் மஜீட்

அதிபர்

(11.03.1961 – 16.08.1961)

கலந்தர் லெப்பை வாத்தியாரின் மகனான இவர், ஜனாப் கே. றசூல் அதிபரின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையின் ஆசிரியராக இருந்த இவரிடம் பாடசாலை பொறுப்புகளையும் கடமைகளையும் மர்ஹூம் எம்.ஐ.கே முகம்மது அதிபர் வழங்கினார்.

இவர் எம்.ஐ.கே முகம்மது அதிபரின் காலத்தில் அவரது நிர்வாகத்திற்கு உதவியதுடன் மாணவர்களின் அடிப்படை தேர்ச்சிகளான எண், எழுத்து, வாசிப்பு முதல் தேர்ச்சிகளை மாணவர்களுக்கு வழங்குவதில் முன் நின்று உழைத்தார். மீண்டும் 17.08.1961 இல் மர்ஹூம் எம்.ஐ.கே முகம்மது பாடசாலையின் அதிபராக கடமையை ஏற்றதினால் குறுகிய காலத்திலேயே (ஐந்து மாதங்கள்) அதிபராக பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. இவர் நிந்தவூரில் திருமணம் செய்து குடும்பத்துடன் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலரது சுவாரஸ்யமா கதைகள் ஆசிரியர்கள் மத்தியில் ஜனரஞ்சகமானவை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - II

## (1970 - 2002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே. அப்துல் றசூல்

அதிபர்
(15.07.1970 – 28.02.1973)

சம்மாந்துறையின் ஆரம்பகால ஆசிரியரான கலந்தர் லெப்பை வாத்தியாரின் மகனான இவர் 1930 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சம்மாந்துறை மிஷனரி பாடசாலையிலும் (தாறுல் உலூம்), உயர்கல்வியை எமது முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். அல்-மர்ஜான், தாருல் உலூம் வித்தியாலயங்களில் அதிபராக பணி புரிந்ததுடன் இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியராக பணியாற்றியுள்ளார். மர்ஹூம் எம்.ஐ.கே. முஹம்மது இடமாற்றம் பெற்றுச் சென்றதுடன் பாடசாலைச் சமூகம் கவலையில் மூழ்கியிருந்தது. எமது வித்யாலயம் வீழ்ச்சி அடைந்து விடுமோ என ஏங்கிக் கொண்டிருந்த வேளை 1970.07.15 இல் ஜனாப் கே. அப்துல் றசூல் பாடசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவர் நியமனம் பெற்ற முதல் வாரத்திலேயே பல முன்னேற்றகரமான திட்டங்களை வகுத்தார். பெற்றார் ,ஆசிரியர் சங்கத்தைப் பலப்படுத்தி பாடசாலையின் பௌதீக சூழலை ஒழுங்கமைத்தார்.

**இவரது சேவைகள்**

01. ஆடு மாடுகள் மேய்ந்த வித்யாலய வளவு முட்கம்பி வேலிகளால் செப்பனிடப்பட்டு எல்லை படுத்தப்பட்டது.
02. அழகிய பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டு பாடசாலை பச்சையாக்கப்பட்டது. இதற்கு உதவியாக மர்ஹூம் ஏ.எல்.எம் யாஸீன் ஆசிரியர் மற்றும் பல ஆசிரியர்கள் செயற்பட்டார்கள்.
03. விவசாயத் தோட்டம் அமைக்கப்பட்டது.
04. அகில இலங்கை தமிழ் தினப் போட்டியில் எமது வித்யாலயம் "ஆத்ம விசாரி" எனும் நாடகத்தில் கல்முனை கல்வி மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றது. திருகோணமலைக்கு சென்று அங்கும் வெற்றி பெற்றது.
05. கலை இலக்கிய போட்டிகளில் கல்முனை கல்வி மாவட்டத்தில் சிறப்புற்று விளங்கியது.
06. டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபிக், திரு. ஏ. சின்னராசா முதலிய மாணவர்கள் பேச்சு போட்டியில் முதலாம் இரண்டாம் இடங்களை பெற்று (1972) தேசிய ரீதியில் பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபிக் தற்போது தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் (2024) என்பதுடன் ஜனாப் கே. அப்துல் ரசூல் அவர்களின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. First Aid, Scout படைகள் ஸ்தாபிக்கப்பட்டன. 1969 இல் ஆரம்பிக்கப்பட்ட சாரணியப் படையினர் வளர்ச்சியடைந்து இவரது காலத்தில் பல சமூகப் பணிகளை ஆற்றினர்.

08. சம்மாந்துறையின் கல்வி வரலாற்றில் பாடசாலையின் "வரலாற்று நூல்" ஒன்றினை வெளியிட்டு வைத்த பெருமை இவரையே சாரும். "வெண்முத்து" (1973) எனும் வரலாற்று சஞ்சிகை பாடசாலை சமூகத்தினால் வெளியீடு செய்யப்பட்டது.

09. பெண் ஆசிரியர்கள் பலர் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டதுடன் பெண்களுக்கான மலசல கூட வசதிகளும் செய்யப்பட்டன.

10. பொத்துவில் தொகுதியின் மாதிரிப் பாடசாலையாக (Model School) தெரிவு செய்யப்பட்டது.

11. கணிதம் விஞ்ஞானம் கற்பிப்பதற்கான விசேட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவ்வித்தியாலயம் உதயமாகி 25 வருட காலத்தை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் "வெண்முத்து" எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டு விழா எடுக்கும் நிகழ்வு எல்லோர் மனதிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கல்வி அதிகாரிகளின் விசேஷட கண்காணிப்பும் ஆசிரியர்கள், பெற்றார்களின் ஒத்துழைப்பும் இவ்வதிபருக்கு கிடைத்தமை இவ்வித்தியாலயத்தின் எழுச்சிக்கு காரணமாகியது. பெருமைக்குரிய சாதனைகள் பல ஈட்டிய ஜனாப் கே. அப்துல் றசூல் அதிபருக்கும் ஏ.எல்.எம் யாஸீன், மாறன் யூ. சையின், எ.எ. கரீம், எம்.எல் அலியார், ஐ.அலியார், எம்.ஏ.சிஎம். மக்கீன், ஏ.எல்.ஏ. கபூர், எம்.எஸ். ஹமீது, வை. உதுமான் மௌலவி, ஏ.எம். சஹீட் போன்ற ஆசிரியர்கள் உறுதுணையாக இருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1973-02-28 ஆம் திகதி இவர் இப்பாடசாலையில் கடமையாற்றிய இவர் முன்மாதிரி அதிபரும் தூரநோக்கு சிந்தனையுள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது பாடசாலையின் பிரதி அதிபரான அஷ்ஷெய்க் ஏ.ஆர்.எம். உவைஸ் (நளீமீ) அவர்களின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகப் பணி

நாம் பெறுவதற்கு அரிய செல்வங்களுள் மேலான ஒரு செல்வம் கல்வி செல்வம். இச்செல்வ-த்தை எல்லா மக்களும் பெற்று நல்ல முறையில் வாழ்வதற்காகவே எமது அரசு காலத்திற்கு காலம் புதுப்புது கல்வித் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

எமது ஈழத்திரு நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இத்திட்டங்கள் ஒவ்வொன்றாக செயல்பட்டுக் கொண்டே வருகின்றன. அந்த வகையில் எமது தாயகமாகிய சம்மாந்துறை பகுதியில் பல பாகங்களிலும் தற்காலத்திலிருந்துதான் ஏற்ற மிகுந்த பல வளர்ச்சிகளை கல்வித் திட்டங்கள் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன. அதிலும் எனது தலைமையில் இயங்கி வருகின்ற அல்-மர்ஜான் வித்தியாலயத்தின் வளர்ச்சி என்பது மிகக் குறுகிய காலத்திலிருந்துதான் ஏற்பட்டு கொண்டு வருகின்றது. இதற்கு முந்திய காலங்களில் இருந்து வந்த வளர்ச்சிகளை விட இன்றைய வளர்ச்சியில் ஏதோ ஒரு வேகமும் தாகமும் இருந்து வருவதை அவதானித்-தவர்கள் புரிந்திருப்பார்கள். செந்தமிழும் சிங்களமும் சீர்மிகு ஆங்கிலமும் அரபும் இளம் மாணவர்கள் பெறுகின்ற கல்விக் கலைகளின் களஞ்சியங்களாக விளங்குகின்றன. இன்று எமது மாணவிகளின் கல்வி என்பது வெறும் மொழி அறிவிலும் புத்தக போதனைகளிலும் புரையோடிப் போய் கிடக்கவில்லை.

புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு புறக்கிருத்திய அனுபவங்களிலும், தொழில் முறைப் பணிகளிலும் அவ்வப்போது ஈடுபட்டு இதுகாலவரை எம்மாணவர்கள் எத்தனையோ அழியாத முத்திரைகளை பெற்று விட்டார்கள். உறுதியான உடலில் தான் உரமான உள்ளம் வளமாக முடியும். இதற்கிணங்க எம் மாணவ மணிகள் உடற்பயிற்சிக-ளிலும், விளையாட்டுத் தேர்ச்சியிலும் ஈடுபட்டு எத்தனையோ வெற்றிகளை பெற்றார்கள். சம்மாந்துறை உப வட்டார விளையாட்டுப் போட்டிகளிலும் தாய்வட்டார விளையாட்டு போட்டிகளும் முதலாவது இடங்களை பெற்று வெற்றிக் கேடயங்களையும் சுவீகரித்துக் கொண்ட வரலாறுகளே இதற்குச் சான்று. விளையாட்டுத் துறை ஈடுபாடு என்பது எமது வித்யாலய மாணவர்களின் கைவந்த கலையாக இன்று அமைந்துவிட்டது.

கலைத்துறையில் எமது மாணவர்கள் கண்டுகொண்டிருக்கும் சிறப்பான வளர்ச்சிகளை சொல்லப்போனால் அவை மிகையாகாது. எத்தனையோ பேச்சாற்றல் மிக்கவர்கள், எழுத்தா-ற்றல் மிக்கவர்கள், ஆடல் பாடல்களில் ஆர்வம் உடையவர்கள், நாடக நடிகர்கள் என்பவர்களுக் கெல்லாம் நல்ல நல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது எமது வித்தியாலயம். கடந்த காலங்களில் நிகழ்ந்தேறிய அரிய பல தமிழ் கலை விழாக்களில் மாணவர்கள் அடைந்த வெற்றிகள் எத்தனை! பெற்றிகள் எத்தனையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை தமிழ் தின விழாவின் போது "யார் மன்னன்" எனும் நாடகம் யாழ்ப்பாணம் சென்று வெற்றிபெற்று வந்தமையும் "ஆத்ம விசாரி" என்னும் நாடகம் திருகோணமலை சென்று சிறப்பெய்தி வந்தமையும். "இதயம் தூங்குகிறது" எனும் நாடகம் கல்முனை சென்று புகழ்காத்து வந்தமையும் எமது வித்யாலயத் தமிழ் நாடக கலை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும். இத்தோடு பாவோதல், பேச்சு, கதை, கட்டுரை போன்ற பல்வகை துறைகளிலும் இன்னும் தனது புகழ் பூத்த முத்திரையை எமது வித்யாலயம் பொறித்துக் கொண்டே வருகிறது. அரசாங்கம் நடாத்தும் "நவோதய புலமை பரிசு பரீட்சை"யிலும் எமது மாணவர்கள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்பட்டு வருவதும் இம்முத்திரைக்கு இன்னொரு எடுத்துக்காட்டு. இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளைப் பொறித்து வரும் எமது வித்யாலயம் விஞ்ஞானம், கைத்தொழில், விவசாயம் போன்ற பலவகை துறைகளிலும் இன்று பணியாற்றி வருவது எமது நிர்வாகத்திற்குரிய சிறப்பம்சங்களாகும். ஒழுக்கம், கலாச்சாரம் என்பனவும் எமது மாணவர்களிடையே ஒருங்கமைந்துள்ள பண்புகள். இவைகளையெல்லாம் அனுபவ ரீதியாக பெறும் பொருட்டு எமது வித்தியாலய மாணவர்கள் இலங்கை சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்ட இனிய நிகழ்ச்சி. இன்றும் பசுமையாக இருக்கிறது.

எமது வித்யாலயத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய இரண்டு ஏக்கர் விவசாயத்துக்குரிய நிலம் இருக்கிறது. இதற்கு பலமான வேலிகளும் வளமான நீர் வசதியும் இல்லாத காரணத்தால் பல ஆண்டுகளாக விவசாய அனுபவப் பயிற்சியை எம் மாணவர்களுக்கு பூரணமாக கொடுக்க முடியாமல் இருந்தது . இப்போது எமது பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் பெரும் முயற்சியால் சுற்றிவர வேலிகள் போடப்பட்டுள்ளன. இதனால் எம் வித்தியாலய நிலம் விளையாட்டு மைதானமாகவும், பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கின்ற பயிர்த்தோட்டங்களாகவும், பூஞ்செடிகள் நிறைந்த கோபுர முன்றலாகவும் எழிலாகத் தோற்றமளிப்பதை இன்று காண முடிகிறது. இந்த அரும் பணிக்கு இரத்தத்தை வியர்வையாக சிந்தி பாடுபட்ட பெற்றார் ஆசிரியர்களையும், மாணவ மணிகளையும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

புதிய முறை கல்வித் திட்டத்திற்கு ஏற்ப இன்று பல புரட்சிகரமான கைத்தொழில் பயிற்சிகளை நாம் நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறோம். புன், தும்பு, கடதாசி, ஓலை, களிமண் போன்ற கருப்பொருட்களை கொண்டு பலவகை தொழில்களும் இன்று பயிற்றுவிக்கப் படுகின்றன. தையல் வேலை என்பதும் இதற்கு விதிவிலக்கல்ல. எதிர்காலங்களில் தச்சுத் தொழில், நெசவு வேலை என்பவற்றுக்கான ஏற்பாடுகளையும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றோம்.

இத்தகைய சிறப்பான அம்சங்களுக்கு மத்தியில் எமக்குள்ள சில இழப்பான குறைபாடுகளையும் இன்று குறிப்பிடாமல் இருக்க இயலாது. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய முறை கல்வித் திட்டம் பூரணமாக அமுல் நடாத்தப்பட வேண்டுமானால் இக்குறைபாடுகள் விரைவில் போக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித்தியாலயத்தில் விவசாய - கைத்தொழில் அனுபவப் பயிற்சிகள் வெற்றியளிக்க என்றும் குறைவில்லாத நீர் வசதி செய்யப்பட வேண்டும். அப்போதுதான் எமது இலட்சிய திட்டத்தில் அமைந்திருக்கின்ற கோழிப்பண்ணை, புறா பண்ணை என்பவற்றை இங்கு ஏற்படுத்த முடியும்.

இங்கு நாற்பது வீதமான மாணவ மாணவிகளுக்கு வகுப்பறை வசதிகள் இல்லை. 60 வீதமான மாணவ மாணவிகளுக்கு தளபாட வசதிகள் குறைவு. மலசல கூடங்கள் போதிய அளவு கிடையாது. மாணவர்களின் கற்பித்தலுக்கான உபகரணங்கள், விளையாட்டு பயிற்சிக்கான ஆதாரங்கள் நிர்வாகத்திற்கு தேவையான தட்டச்சு - கல்லச்சு இயந்திரங்கள் ஆசிரியர்களுக்கு அவசியமான குறைந்தபட்ச சௌகரியங்கள் எதுவுமே கிடையாது.

அதி முக்கியமாக கைத்தொழில் பயிற்சிகளுக்கு தேவையான கருவிகள், விஞ்ஞானக் கல்விக்கு அவசியப்படும் உபகரணங்கள் அனைத்துமே போதாக்குறையாகவே இருக்கின்றன. எந்த ஒரு விஞ்ஞான கூடமோ கைத்தொழிற் கூடமோ நூல் நிலையமோ எதுவுமே இல்லாமல் தான் இங்கு கற்றல் தொழிற்படுகின்றது.

இத்தன்மையான குறைபாடுகள் இருந்தும் 50 வீதமான ஆசிரிய செல்வங்களை மட்டும் பெற்று ஏழ்மையான சூழலில் அமைந்திருக்கின்ற எமது வித்தியாலயம் அரிய பல சாதனைகளை கண்டு இன்று வெள்ளி விழாவையும் விமர்சையாக கொண்டாடுகின்றதென்றால், இதற்கு காரணம் நாங்கள் எமது தியாகப் பணியில் கொண்டுள்ள அயராத ஆர்வமும், 'ஒரே ஆசிரிய குடும்பம்' என்ற ஒருமித்த எண்ணமும், ஒன்றிணைந்து இயங்கி வரும் தன்மையுமேயாகும். இதயபூர்வமான சேவை உணர்வும், எதற்கும் தயங்காத தன்னம்பிக்கையும் எங்கள் இரத்தத்தில் ஊறிவிட்டிருப்பதாலோ என்னவோ எதிர்காலங்களில் எங்களால் அரிய பல சாதனைகளை இலகுவாக சாதிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு எனக்கு இருக்கிறது.

இவற்றையெல்லாம் நேருக்கு நேர் நின்று கண்டும் உணர்ந்தும் கணித்த காரணத்தினால் தான் போலும் எமது கல்விப் பகுதி மேலதிகாரிகள் பொருள் வளங் காணத் துடிக்கும் எமது ஆட்சியாளரின் புதிய கல்வித் திட்டத்தை அமுல் நடாத்துவதற்கு இந்த அல்-மர்ஜான் வித்தியாலயத்தை ஒரு மாதிரி பாடசாலையாக தேர்வு செய்திருக்கிறார்கள். பொத்திவில் தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட எமது முத்தான வித்யாலயம் எதிர்காலங்களில் இன்னும் பிரகாசம் அடையும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.

எதிர்காலங்களில் அடையப்போகும் பிரகாசம் இப்பகுதி மக்களின் இதயங்களில் மூண்டு கிடக்கின்ற இருளைப் போக்கும் புதுப் பிரகாசமாக இருக்க வேண்டும். இறுக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்போனால் ஒவ்வொரு மாணவனும் அறிவியல் ஆத்மீக துறைகளிலும் , பொருளாதார - தொழில்துறைகளிலும் புதுப்புது பயிற்சிகளை பெற்று பூரணத்துவம் உடையவனாக புறப்பட வேண்டும். அவனது புறப்பாடு புதியதோர் உலகம் செய்யும் பணிக்கு வழி சமைக்க வேண்டும்.

இப்புனித பணிக்கு இராப் பகலாக உழைத்த - உழைக்கின்ற எழுச்சிமிக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் ஆட்சியாளர்கள் அனைவருக்கும் எனது இனிய நன்றி கலந்த பாராட்டுக்கள்.

எமது மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். சமீம் அவர்களும் எமது பிரதமர் கல்வி அதிகாரி ஜனாப் எஸ்.எம்.எம்.ஏ கபூர் அவர்களும் எமது வித்யாலயத்திற்காக செய்த சேவை-களை என்றும் மறக்க முடியாது. சிறப்பாக எங்களில் ஒருவராக இருந்து எங்களது ஆக்கப்பணி-களுக்கெல்லாம் ஊக்கமளித்து - உறுதுணை புரிந்துவரும் எமது வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ்.எச்.எம்.அலியார் அவர்களையும் எமது இதயங்கள் இழப்பதற்கியலாது.

எந்த நிலையிலும் எமது வித்தியாலயத்தின் எழுச்சிக்காக இதனோடு பாந்தமுடைய ஒவ்வொருவரும் ஏதோ தன்னால் இயலுமான பணிகளை தொடர்ந்தும் அளித்து வர வேண்டியது தவிர்க்க முடியாத கடமையாகும். இக்கடமையின் இடையறாத வளர்ச்சியிலே-தான் எமது விததியாலயத்தின் மலர்ச்சிகள் அமைந்துள்ளன என்பதை எண்ணிப் பணிபுரிய எல்லோரையும் இதய பூர்வமாக அழைக்கின்றேன்.

**கே. அப்துல் றசூல் (அதிபர்)**
1973.02.03
நன்றி - வெண்முத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1969
# "யார் மன்னன்" நடிகர் குழு



அகில இலங்கைத் தமிழ்த்தின விழா நாடகப் போட்டி – 1969 எம்.எல். அலியார் (ஆசிரியர்), ஏ.எல்.எம். யாசீன் (ஆசிரியர்) ஏ.ஏ. கரீம் (ஆசிரியர்)

# 1972
# "யார் மன்னன்" நடிகர் குழு



அகில இலங்கைத் தமிழ்த்தின விழா கல்முனை மாவட்ட நாடகப்போட்டி – 1972 யூ. ஸெயின் (ஆசிரியர்) மற்றும் நடிகர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூ.எம். முகைதீன்

அதிபர்
(16.05.1986 - 30.4.1987)

சாய்ந்தமருதில் 1932 ஆம் ஆண்டு பிறந்த மர்ஹூம் UM. முகைதீன் அதிபர் அவர்கள் 1958 சம்மாந்துறையில் திருமணம் முடித்தன் பயனாக இம்மண்ணின் மைந்தரானார் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், முஸ்லிம் மகளிர் கல்லூரி (பிரதி அதிபர்) மற்றும் அதிபராக கடமையாற்றினார். 16.05.1986 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபரான MIK. முஹம்மது அதிபர் இடம் இருந்து பாடசாலையின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் பாடசாலை 1C மஹா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது.

மேலும் உயர்தர கலை பிரிவும் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1987.03.06 ஆம் திகதி தமிழ்மொழி, இஸ்லாம், அரசியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டது. பாடசாலைக் நிதிக்கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி வெளிப்படையான நிதி முகாமையை அறிமுகப்படுத்தினார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர் சம்மாந்துறை ஓய்வூதிய சமூக அமைப்பை ஏற்படுத்தி ஓய்வு பெற்றவர்களுக்கு சேவையாற்றினார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் சம்மாந்துறை தப்லீக்குள் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

இவர் அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் குறுகிய காலம் சேவை செய்தாலும் இக்கல்லூரியின் வளர்ச்சியின் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் MM. நிசார்தீன் அவர்களின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யு.எல். அலியார் MA,PGDE, SLEAS-I

அதிபர்

(01.05.1987 -30.06.1989)

சம்மாந்துரையின் புத்திஜீவிகளில் முதன்மையானவர் முதல் MA பட்டதாரி. இவர் தனது ஆரம்பக் கல்வியை முஸ்லிம் மஹா வித்யாலயத்திலும் உயர் கல்வியை இலங்கை பல்கலைலக்கழகத்திலும் (1968ல் BA பட்டத்தையும் PGDE மற்றும் MA பட்டங்களையும் பெற்றவர். கிழக்கு மாகாணத்தில் மாகாண கல்வி பணிப்பாளராகவும் கடமை புரிந்துள்ளார். குறிப்பாக சம்மாந்துறையின் கல்வி வரலாற்றில் ஆசிரியராக இருந்து மாகாண கல்வி பணிப்பாளராக உயர்ந்து பல பதவிகளை அலங்கரித்த கல்விமான் என்றால் மிகயாகாது!.

இவர் அல்-மர்ஜான் பாடசாலைக்கு 01.05.1987 ல் தனது கடமைகளை ஏற்றுக்கொள்கிறார். Mr. U.M.முகைதீன் அதிபரிடமிருந்து பாடசாலையின் பொறுப்புகளை ஏற்று நடாத்திய இவரது காலத்தில் பாடசாலை பல துறைகளில் முன்னேற்றம் கண்டது. கொத்தணி அதிபராகவும் இவர் காலத்தில் செயல்பட்டார். அப்துல் MA.மஜீத் MP இக்காலத்தில் பிரதி அமைச்சராக இருந்ததினால் பாடசாலையின் புதிய கட்டிடங்கள், பாடசாலை முன் மதில்களுக்கான கட்டிட வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன. மற்றும் பல்வேறு பௌதீக அபிவிருத்திகளை மேற் கொள்வது இலகுவாக இருந்தது. கலை இலக்கியப் பணிகளும் சிறப்பாக இடம்பெற்றன. குறுகிய காலமே இவர் பாடசாலையில் பணியாற்றி பதவி உயர்வு பெற்று சம்மாந்துறையின் கோட்டக் கல்வி அலுவலகத்தின் முதலாவது கல்வி பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பொறுப்புக்களை ஐ. அலியார் அதிபரிடம் இவர் 30.06.1989ல் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ. அலியார்

அதிபர் SLPS-1
(01.07.1989 – 25.03.1996)

சம்மாந்துறையில் 1936 இல் பிறந்த இஸ்மாலெப்பை அலியார் தனது ஆரம்பக் கல்வியை மெத்தடிஸ் மெஷன் பாடசாலையிலும் உயர்தர கல்வி சம்மாந்துறை கனிஸ்ட வித்தியாலயத்தில் கற்று SSC பரீட்சையில் சித்தியடைந்தார் 1989 ஆம் ஆண்டு 07.01 இல் இவர் அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு அதிபராக வந்த காலத்தில் பல்வேறு அரசியல் சமூக முரண்பாடுகள் நிலவிய காலகட்டமாக. சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியால யத்தில் இருந்து அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு அதிபராக வந்ததும் தெற்கு கொத்தணி அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவர் வந்த காலத்தில் பாரியளவில் பாடசாலையில் மீலாத் விழா கொண்டாடப்பட்டு மாணவர்களுக்கு சோறும் கறியும் வழங்கப்பட்டது. 1218 மாணவர்களைக் (1989) கொண்ட இப்பாடசாலையில் இவரது காலத்தில் காத்திரமான பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் பட்டது. அவற்றில் மிக முக்கியமான கட்டிடமாக ஆளு காரியப்பர் கேட்போர் கூடம் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இவரது சேவைகளில் முக்கியமானவைகள்**

- ✓ 30.01.1995 ல் அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது.
- ✓ பலமாடி கட்டிடங்கள் விஞ்ஞான ஆய்வு கூடம் என்பன அமைக்கப்பட்டது.
- ✓ மீராலெப்பை மண்டபம் பொது வைபவங்களுக்காகப் பாவிக்கப்பட்டது.
- ✓ 11.5.1992 ல் இருமாடிடக் கட்டிடம் திறப்பு விழா செய்யப்பட்டது, அமைச்சர் MA. அப்துல் மஜீட் MP அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.
- ✓ அப்போது நெசவுக்கைத்தொழில் அமைச்சராக இருந்த MA. அப்துல் மஜீத் MP அவர்கள் தனது நிதி ஒதுக்கீட்டின் இக்கட்டிடத்தினை அமைத்தார்.

பல ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அமைச்சர் AR. மன்சூர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கேட்போர் கூடம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் சம்மாந்துறையின் கல்வி வரலாற்றில் இவ்வாறான ஒரு மண்டபம் எமது கல்வி வலையத்தில் அமைக்கப்பட்டது. இதுவே முதல் தடவையாகும். இதன் சிறப்பு விழா மிகவும் கோலாகலமாக இடம்பெற்று விழா நிகழ்வுகள் இரவு 09.00 மணிக்கு நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பெயரில் மைதானத்தில் I. அலியார் Stadium ஒன்றும் இப்பொழுது காணப்படுகி-ன்றது. அது தற்போது புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 23.01.1995இல் பெண்களுக்கான தனியான பாடசாலையாக இது மாற்றமடைகிறது. இது தனியாக பெண்கள் கல்லூரியாக அமைவதில் பல சமூக நிறுவனங்கள் காத்திரமாக செயற்பாட்டமை குறிப்பிடத்-தக்கதாகும். முன்னாள் அமைச்சரும் SLMC தலைவருமான மர்ஹூம் MHM அஸ்ரப் இதன் வளர்ச்சிக்கும் இதனை பெண்கள் கல்லூரியாக மாற்றுவதும் தமது பொறுப்பு என குறிப்பிட்-டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது காலத்தில் இல்ல விளையாட்டுப் போட்டியும் இடம்பெற்று (1995) மேர்ஸா MP Block விளையாட்டு மைதானம் வேறாக்கப்பட்டு இரும்பு கேட் அமைக்கப்பட்டமை இவரது காலத்-திலேயேயாகும்.

1513 மாணவர்களை (1995) இல் கல்லூரியில் கல்வி கற்றதுடன் பல மாணவர்கள் பல்கலைக்-கழகமும் சென்றனர். 59 ஆசிரியர்களுடன் இயங்கிய இக் கல்லூரி சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலத்துடன் போட்டி போட்டு முன்னேறியது. பெண்கள் கல்வியில் தனித்-துவமான ஓர் இடத்தினை சம்மாந்துறை பெறுவதற்கும் இக்கல்லூரி முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். தனது 39 வருட கல்விப் பணியில் இருந்து பாடசாலையிலேயே இவர் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி பாடசாலைக்கு விஜயம் செய்தபோது அருகில் பிரதி அமைச்சர் எம்.ஏ.அப்துல் மஜீட்-1992



கட்டிடத் திறப்பு விழா
அப்துல் மஜீட் Block - 1992




எமது பாடசாலை பெண்கள் பாடசாலையாக மாற்றப்பட்ட நிகழ்வு
தலைவர் MHM. அஷ்ரப் அதிதியாக வருகை தந்தபோது - 1994



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# NAJA

## Humanity and Education Trust Foundation

**Founder & Director**
Mr. S.M. Nafeer
B.Com, M.Com, MAAT SL, IAB UK

No. 261, 3rd Cross Street, Sammanthurai - Sri Lanka

ARA MARKETING COMPANY
(PVT) LTD.

All kind of Promotional Umbralla Printing

S. MOHAMED NAFEER
CHAIRMAN

075 399 3998

aramarketing.pvt.ltd@gmail.com

No. 32 Vesta Home, Vivekanada Road,
Colombo -06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எஸ்.எச்.எம். முஸ்தபா MA,PGDE, SLEAS -1

அதிபர் SLPS-1

(26.03.1996 – 06.02.2002)

அதிபர் சேவையைச் சேர்ந்த SHM. முஸ்தபா கலந்தர் லெப்பை போடி சாகுல் ஹமீது என்னவருக்கு மகனாக 1943ம் ஆண்டு சம்மாந்துறையில் பிறந்தார். அதிபர் ஐ. அலியாரின் மைத்துணரான இவர் எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபராக கடமையாற்றி ஐ. அலியார் (அதிபர்) ஓய்வு பெற்ற பின் பாடசாலையின் 26.03.1996 இல் பொறுபேற்றார். இவர் இயல்பிலேயே கலை, இலக்கியத் துறைகளில் ஆர்வம் கொண்டதனால் அப்போதே கதை, கட்டுரை, கவிதைத் துறைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் பாடசாலையின் பொறுப்பேற்றதும் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு பெரிதும் முக்கியத்துவம் வழங்க எமது மாணவிகளை ஊக்கப்படுத்தினார்.

1996 இல் வருடாந்த பரிசளிப்பு விழாவை நடாத்தி மாணவர்களையும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தினார். கிழக்கு மாகாணக் கல்வி கலாச்சார அமைச்சர் சுந்தரம் திகவலாலா இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். கல்விச் சுற்றுலாக்கள் பல மேற்கொண்டு மாணவிகளை இலங்கையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றார். இவரது ஆசிரியர் குழாம் எப்பொழுதும் இவரைச்சுற்றியே காணப்படுவர். வருடாந்தம் பரிசளிப்பு விழாக்களும் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் விமர்சையாக இடம்பெறும். பிரதி அமைச்சர் ULM. முகைதீன், தலைவர் MHM. அஸ்ரப் (அமைச்சர்) MI. அன்வர் இஸ்மாயில் (பிரதி அமைச்சர்) இந்நிகழ்வுகளை அலங்கரித்தனர். அடிக்கடி இவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டனர்.

IM இஸ்ஸடீன், MTM தௌபீக் போன்ற கல்வி அதிகாரிகள் பாடசாலையை மேற்பார்வை செய்வதுடன் இவரது நண்பர்களாகவும் காணப்பட்டனர். இதனால் இவரது நிர்வாகம் மிகவும் சிறப்புற்று விளங்கின. பாடசாலையின் வாசிகசாலைக்கான புதிய கட்டிடம் தற்போதய அதிபர் காரியாலாயம் மற்றும் பாரிய ஜெனரேட்டர் மின் உற்பத்திச் சாதனம் புதிய மலசலகூட வசதிகள் என்பன பெறப்பட்டன. மேலும் பாடசாலையின் சுற்று மதில் உயரமாக அமைக்கப் பட்டது. விவசாயத் தோட்டம் முற்றத்துப் பூங்காவும் உருவாகி பாடசாலை சூழல் அழகு படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்பட்டு மாபெரும் கல்விக் கண்காட்சி இடம்பெற்றது. பாடசாலையின் 03 மாடிக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

(2000.07.24) A/L தின விழாக்களும் சிறப்பாக இடம் பெற்றது. இதனால் மாணவர்கள் உற்சாகமாக பாடசாலைக்கு சமூகமளித்து தமது ஆளுமைகளை வெளிப்படுத்தினர்.

பாடசாலையின் ஸ்தாபகரில் ஒருவரான மர்ஹூம் AM. மீராலெப்பை அதிபர் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட்டார். தனது 40 வருடமாக கல்விப்பணியை சிறப்பாக மேற்கொண்ட-துடன் காரியாலய உதவியாளர்களான நௌசாட், பௌஸ்தீன், அமீர் போன்றோரையும் அரவணைத்த் தவறவில்லை இறுதியாக ஓய்வு பெறும் காலத்தில் 'சரித்திரம் கூறும் சம்மாந்துறை' எனும் நூலையும் எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LEADERSHIP PROGRAMME

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி




MKM. மன்சூர் (Ex. PD) வளவாளராக கலந்து சிறப்பித்தார் அருகில் SHM. முஸ்தபா அதிபர்



ஸ்தாபகர் தின நிகழ்வில் முன்னாள் உபவேந்தர் Prof. MLA. காதர் பிரதம அதிதியாக அழைத்து வரப்படுகிறார் அருகில் IM. இஸ்ஸடீன் ZDE மற்றும் அதிபர் ஆசிரியர்கள்



M.I. அன்வர் இஸ்மாயில் - பிரதி அமைச்சர்
தற்போதைய அதிபர் காரியாலயம் திறப்பு விழா



AHM. அப்துல்லாஹ் ISA
நிகழ்வில் உரையாற்றுகின்றார்
பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த பரிசளிப்பு விழா - 1998.07.02



SLMC தலைவர் MHM. அஸ்ரப் (அமைச்சர்) மற்றும் ULM. முகைதீன் (பிரதி அமைச்சர்) வரவேற்று அழைத்து வரப்படும் காட்சி



பொருட்காட்சிக்கூடம் SLMC தலைவரால் திறந்து வைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - III

# (2002 - 2024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே.எம்.எஸ்.எம். தமீம்

அதிபர் SLPS-1
(2002.02.07 - 2003.10.19)

1952 இல் சம்மாந்துறையில் பிறந்த Mr. KMSM. தமீம் இலங்கை அதிபர் சேவை - I சேர்ந்தவராகும். ஆரம்பக் கல்வியை தாறுல் உலூம் மகா வித்யாலயத்திலும் தனது இடை நிலைக் கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயத்திலும் கற்றார் அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நீண்ட காலம் பிரதி அதிபராக கடமையாற்றிய இவர் 07.02.2002 இல் பாடசாலையின் பொறுப்புகளை ஏற்று அதிபராக தொழிற்பட்டார்.

மொழி ஆற்றல் உள்ள இவர் பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளை மிகவும் நேர்த்தியாக கையாளக் கூடியவர். இதனால் அக்காலத்து அதிபர்களுக்கு இவரது பணி மிகவும் ஊன்று கோலாக அமைவதுடன் நம்பிக்கை மிக்கதாகவும் காணப்பட்டது. இவரது காலத்தில் A/L, O/L தின வைபவங்கள், சுற்றுலாக்கள், பரிசளிப்பு விழாக்கள் என்பன இடம்பெற்று மாணவர்கள் மத்தியில் இணைப்பாட விதான செயற்பாடுகள் திறன்பட செயற்பட்டன.

இவரது காலத்தில் பாடசாலையின் நூலகம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மத்திய அரசின் கல்வி அமைச்சினால் நூலகத்திற்கான தளபாடங்கள் கிடைத்தன. எல்லே-ாருடனும் இனிமையாக பழகும் இவர் சிறந்த பேச்சாற்றல் மிக்கவராகும். 19.10.2003 அல் மர்ஜான் வளர்ச்சிக்காக செயற்பட்ட இவர் 2010.12.21 முதல் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபராகவும் சிறிது காலம் பணியாற்றி குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே.எல். அப்துல் தசூல் B.com, PGDE

அதிபர் SLPS-1
(01.07.1994 - 04.09.1994, 20.10.2003 - 04.01.2011)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வர்த்தக பட்டதாரியான KL. அப்துல் தசூல் அவர்கள் பட்ட பின்படிப்பை நிறைவு செய்தவர். இவர் 1959ம் ஆண்டு இப்பாடசாலையின் மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (Index No: 678) இப்பாடசாலையின் மாணவனாக இருந்து இங்கேயே நீண்ட காலம் அதிபராக கடமையாற்றியமை இவரது சிறப்பம்சமாகும். இப்பாடசாலையின் முன் நுழைவாயில் (Gateway) இவரது காலத்திலேயே கட்டப்பட்டது. இதனால் பாடசாலை கவர்ச்சிகரமான தோற்றம் பெற்றது.

இவர் 1994 ஒரு தடவையும் பின்னர் 2003 - 2011 என இரண்டு தடவைகள் அதிபராக கடமையாற்றியுள்ளார். 08 வருடங்கள் கடமைளயாற்றிய இவர் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

மேலும் இவரது காலத்தில் மர்ஹூம் MI. அன்வர் இஸ்மாயீல் (MP) யின் நிதி ஒதுக்கீட்டில் Hostel கட்டிடத்திற்கான அடிக்கல் 2004 இல் நடப்பட்டது. Science Lab, இரு மாடிக் கட்டிடம், CLC தொழில்நுட்ப கணணி கூடம் என்பன அமைக்கப்பட்டு மாணவர்களின் கணனி அறிவு மேம்படுத்தப்பட்டது. மேலும் முதன் முதலாக எமது கல்வி வலையத்தில் ஆங்கில மொழி கல்விப்பிரிவு (English Unit) திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு நவீன உலகின் கல்விப் போக்கிற் கேற்ப கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான அடித்தளம் இப்பாடசாலையில் இடப்பட்டது.

ஆங்கிலம், கணினி அறிவு இரண்டும் புதிய உலகின் அறிவுத்தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே தசூல் அதிபரின் இந்த முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

பாடசாலையின் Canteen வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஆசிரியர் - மாணவர்களின் தேவைகள் திருப்திகரமாக இருந்தது. விஞ்ஞானப்பிரிவு மீள் ஒழுங்குபடுத்தப்பட்டு A/L மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசமும் அதிகரித்தது.

மாகாண மீலாத் விழா இவரது காலத்தில் இடம் பெற்றது. கலை வர்த்தக பிரிவுக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் பலர் கற்பித்தலில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்தில் மேலும் பாடசாலையின் குடிநீர் தேவை விஸ்தரிக்கப்பட்டு மாணவர்களின் தாகம் தீர்க்கப்பப்பட்டது.

மேலும் இவரது காலத்திலேயே கணினி முறையிலான 'Bell System' அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலை வரலாற்றில் இது ஒரு முக்கிய விடயமாக பார்க்கப்படுகிறது. இந்த நடைமுறை. பின்னர் பல பாடசாலைகளில் நடைமுறைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எப்பொழுதும் சற்று வித்தியாசமாக சிந்திக்கும் தசூல் அதிபரின் இந்தப்பணி முக்கியத்தவம் வாய்ந்தது.


இவ்வாறு பல பணிகளை அல் மர்ஜான் கல்லூரிக்கு ஆற்றிய KL. அப்துல் தசூல் அதிபர் 04.01.2011 வரை இங்கு கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலையின் கல்வி பௌதீக அபிவிருத்தியில் இன்றும் அக்கறையுடன் காணப்படும் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சுதந்திரதின நிகழ்வின்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் அதிபர் KLA. தகூல் அவர்கள் மரக்கன்று நடும் காட்சி - 2020





முன்னாள் அதிபர்கள் சுதந்திரதின நிகழ்வில் - 2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாபா அபீறா சலீம்

அதிபர் SLPS-1
(25.01.2011 – 25.02.2018)

1958ல் சம்மாந்துறையில் பிறந்த அபீறா சலீம், இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர். தரம் 1 - 13 வரை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலத்தில் கல்வி கற்றார். இவர் தனது பாடசாலை காலத்தில் இணைப்பாட விதானத்தில் சிறந்து விளங்கியதுடன் சிரேஷ்ட மாணவியாகவும் (Senior Prefect) உயர்வு பெற்றிருந்தார். தனது 22 வருட ஆசிரியர் சேவையில் பணியாற்றி பல புத்திஜீவிகளை உருவாக்கியுள்ளார்.

இவர் 25.01.2011 அப்போதைய வலயக் கல்வி பணிப்பாளர். MKM மன்சூர் அவர்களின் வேண்டுகோளின் பெயரில் இப்பாடசாலை யைப் பொறுப்பெடுத்தார். கல்வி அமைச்சின் நியமன கடிதத்துடன் பாடசாலைக்கு விஜயம் செய்த இவரது நியமனம் சம்மாந்துறை அல்-மர்ஜான் கல்லூரியின் வரலாற்றில் ஒரு முக்கிய நாளாகும். பெண்கள் பாடசாலைக்கு பெண் ஒருவர் அதிபராக வருவதென்ற வரலாற்று நிகழ்வு கல்விச்சமூகத்தில் பல ஐயங்களை ஏற்படுத்தினாலும் இது ஒரு மரபாக தற்போது பார்க்கப்படுகிறது. வலயக் கல்வி அலுவலகத்தின் பூரண ஒத்துழைப்புடன் இவர் தனது கடமையை சிறப்பாக முன்னெடுத்தார்.

மாணவிகளது ஒழுக்கம் சமூக முன்னேற்றம் போன்றவைகளில் அக்கறையோடு செயல் பட்டார். "என்ன மகன், என்ன மகள்" என்ற சொற்பிரயோகங்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் வெகுவாக கவர்ந்தன. எல்லோரையும் அரவணைக்கும் போக்கு பாடசாலை நடத்துவதில் உள்ள சவால்களை இலகுவாக்கியது.

மஹிந்தோதய தொழில்நுட்ப கூடம், வலயமட்ட 04 நாள் கண்காட்சி, கல்விச் சுற்றுலா, இல்ல விளையாட்டுப் போட்டி, மாணவர் பாராளுமன்றத் தேர்தல், O/L, A/L தின வைபவங்கள் என்று தனது ஏழு வருட காலத்தில் பல பணிகளை அதிபர் ஆசிரியர்களின் உதவியுடன் மேற்கொண்டார்.

கல்வித்துறையிலும் மாணவர்களால் பல சாதனைகள் இவரது காலத்தில் நிகழ்ந்தன. இவர் ஓய்வு பெறும் வேளையில் ஆசிரியர் சமூகம் "பிரகாசம்" என்னும் சிறப்பு மலரையும் வெளியிட்டு சேவை நலன் பாராட்டு விழாவையும் ஒழுங்கு செய்தமை இவரது அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த கௌரவம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யு.எல். லாபிர் BA, BED

அதிபர் SLPS-III
(26-02-2018 – 08-01-2020)

இலங்கை அதிபர் சேவை (SLPS-III) யைச் சேர்ந்த ஜனாப். யு.எல். லாபீர் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியராக கமு/சாஹிரா கல்லூரியில் பணிபுரிந்து அதன் பின்னர் இலங்கை அதிபர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். திருமதி அபீறா சலீம் அவர்கள் ஓய்வு பெறும் போது பாடசாலையின் பொறுப்புகளை திரு. யு.எல். லாபீர் அவர்களிடம் 26.02.2018 இல் ஒப்படைத்தார்.

28.02.2018 A/L மாணவர்களுக்கு Technology பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலையின் O/L, A/L தின வைப்பவங்கள் இவரது காலத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இக்காலத்தில் இப்பாடசாலையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வு இடம் பெற்றது.

### தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படல் - 01.03.2019

இது இவரது காலத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். மத்திய கல்வி அமைச்சின் கட்டளைக்கு இணங்க இப்பாடசாலை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு சம்மாந்துறையின் இரண்டாவது தேசிய பாடசாலை என்ற அந்தஸ்தை பெற்றுக் கொண்டது. சம்மாந்துறையின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் MA.ஹசன் அலி அவர்களின் அயராத உழைப்பினால் இது தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பாடசாலை மாணவிகள் விளையாடுவதற்கான Netball Court (எஸ்.எம்.எம். இஸ்மாயில் (MP)யின் நிதி ஒதுக்கீட்டில்) மற்றும் அப்துல் மஜீத் கட்டிடத்திற்கான புனரமைப்பு, மலசலகூட வசதிகள் என்பன போன்ற பௌதிக அபிவிருத்திகளும் இவரது காலத்தில் இடம்பெற்றது. பெண் ஆசிரியைகளுக்கான தனியான Staff Room இவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வி அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டதுடன் வைத்தியத் துறைக்கு ஒரு மாணவி தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது நிர்வாகத்திற்கு மிகவும் உறுதுணையாக பல பிரதி அதிபர்கள் உதவி அதிபர்கள் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'Mother ශ්‍රී ලංකා' வேலைத்திட்ட குழு – 2017

### அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள்




'Mother ශ්‍රී ලංකා' பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எம்.ஐ. மீரா முகைதீன் BEd

அதிபர் SLPS-1
(11-06-2021 – 21.08.2023)

1963 ல் பிறந்த ஜனாப். எம்.ஐ. மீராமுகைதீன் இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர். இவர் இப்பாடசாலையில் 11.06.2021ல் கடமையேற்றார். பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் பல கிராமப்புற பாடசாலைகளில் பணியாற்றி மாணவர்களின் கல்விக்காக உழைத்துள்ளார்.

பாடசாலைக்கு நேரத்தோடு சமூகம் கொடுக்கும் பழக்கமுடையவர். எல்லா ஆசிரியர்கள் அதிபர்களுடனும் 'ஸலாம்' கூறி அன்புடன் வரவேற்கும் குணமுடையவர். இவரது காலத்தில் பாடசாலையில் பல கல்வி மற்றும் பௌதிக அபிவிருத்திகள் ஏற்பட்டன. நூலக வாரம் கொண்டாடப்பட்டு பல நூல்கள் பழைய மாணவர்களின் உதவிகளுடன் பாடசாலைக்கு கிடைத்தன.

தரம் 06 வகுப்பறை கட்டிடங்கள், மேர்ஸா கட்டிடம், O/L கட்டிடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டன. A/L, O/L தின கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டன. இப்தார் நிகழ்வு, பரிசளிப்பு விழாக்கள், கலை இலக்கிய நிகழ்வுகள், பெற்றார் சமூகத் தொடர்புகள், O/L மாணவி களுக்கான பிரத்தியோக வகுப்புக்கள், Maths Camp மற்றும் கல்விச் சுற்றுலாக்களும் இடம்பெற்றன.

பாடசாலையின் MS காரியப்பர் மண்டபத்தின் பிரதான குறைபாடாக இருந்த கதிரைகள் பழைய மாணவிகளின் உதவியுடன் பெறப்பட்டன. மைதானத்தின் ஸ்டேடியம் புனரமைப்பு செய்யப்பட்டது. பழைய மாணவர்கள் உதவியுடன் பாடசாலையின் பெயர்ப் பலகை போடப்பட்டது. புதிய Layout காட்சிப்படுத்தப்பட்டது. இவ்வாறு பல பௌதிக அவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கல்வித்துறையிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக O/L பெறுபேறுகள் அதிகரிக்கப்பட்டன. உயர்துர மாணவர்கள் பலர் பல்கலைக்கழக அனுமதியும் பெற்றனர். இவரது மகளான Dr. MM. பாத்திமா ஸியாதா MBBS பட்டம் பெற்று, MD (Reading) வைத்திய நிபுணர் என்பதுடன் இவர் இப்பாடசாலையின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.ஐ. மீராமுகைதீன் அதிபரின் பிரியாவிடை நிகழ்வு
## 2023 ஆகஸ்ட்



கட்டுறு பயிலுனர்கள்
2018
அதிபர், பிரதி அதிபர்கள்



ஆசிரியர்தின நிகழ்வின்போது
2023





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எச்.எம். அன்வர் அலி

(MA(PSc), PGDE, Dip in Eng)

அதிபர் SLPS-1

(09.01.2020 - 10.06.2021)

(22.08.2023 - இன்றுவரை)

1964இல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை சது/தாறுல் ஊலூம் மிஷன் பாடசாலையிலும் பின்னர் இடைநிலைக்கல்வியை மட்/சென் மைக்கல் கல்லூரியிலும், மற்றும் சது/அல்-மர்ஜான் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டம்பெற்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றது முதல் உயர்தர மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானத்தை கற்பித்து வந்தார். பின்னர் கலை, வர்த்தகப் பிரிவின் பகுதித் தலைவராக செயற்பட்டதுடன் பெண்கள் பிரிவுக்கான அதிபராகவும் கடமையாற்றினார். சுமார் 1400 க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட அப்பிரிவை மிகச் சிறப்பாக வழிநடத்தியமைக்கு அக்காலப்பிரிவில் வெளிவந்த க.பொ.த. சாதாரணதர மாணவிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் சான்றுபகர்கின்றன.

2015 முதல் 2019 வரை கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையில் பிரதி அதிபராகவும், குறிப்பிட்ட காலம் அதிபராகவும் கடமையாற்றினார். 2019 மார்ச் முதலாம் திகதி அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டபோதும் தரம் 1 ஐச் சேர்ந்த அதிபர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 09.01.2020 இல் கல்வி அமைச்சினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். சுமார் ஒரு வருடமும் 6 மாதங்களும் கடமையாற்றியதன் பின்னர் மீண்டும் 22.08.2023 தொடக்கம் இன்றுவரை அதிபராக கடமையாற்றி வருகிறார்.

தனது சேவைக்காலம் முழுவதும் தேசிய பாடசாலைகளிலேயே கடமைபுரிந்த இவர் தான் பதவியேற்றது முதல் இப்பாடசாலையின் கட்டமைப்பை தேசிய பாடசாலையின் கட்டமைப்புக்குள் கொண்டுவருவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியன. அதிபர் காரியாலயத்தை தேசிய பாடசாலையின் தகுதிக்கேற்ப விரிவுபடுத்தினார். அதற்குரிய செலவை தானே பொறுப்பெடுத்துக் கொண்டார். அத்துடன் பிரதி, உதவி அதிபர்களின் காரியாலயங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன. பாடசாலையையும் சமூகத்தையும் இணைக்கும் வகையில் பழைய மாணவர் சங்கத்தை புனரமைத்தார். அதன் பிரதிபலனாக பாடசாலை மிகவும் பயனடைந்தது. இன்றும் பயனடைந்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவிட் - 19 காலப்பகுதியில் நீண்டகாலமாக பாடசாலை மூடப்பட்டிருந்தபோது விவசாயத் தோட்டத்தை புனரமைக்கும் பணியில் கூடுதல் கவனத்தை செலுத்தினார். பத்தைகள் பிடித்துக் காணப்பட்ட அவ்விடம் செல்வம் பொழியும் இடமாக மாறியது.

மேலும், 'சப்ரிகம' வேலைத்திட்டத்தின் மூலம் நீர் வசதிகள், புதிய மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதில் இக்காலப் பிரிவை பயன்படுத்தினார். பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலம் புதிய நீர்இணைப்பினைப் பெற்று நீர் வழங்கல் அமைப்பை விரிவாக்கம் செய்தார். இக்காலப் பிரிவில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் பாடக்குறிப்புக்களையும், வினா அமைப்புக்களையும் வழங்கியதுடன் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக வலய ரீதியான நிலையங்களாக சில ஆசிரியர்களின் வீடுகளை செயற்பட வைத்தமையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயங்களாகும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடசாலை திறக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சுற்றுச்சூழலை சுத்தம் செய்யும்வகையில் இராணுவத்தின் உதவியைப் பெற்று பாரியதொரு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

பரிசளிப்பு விழா, கல்விச் சுற்றுலா, சுதந்திர தின நிகழ்வுகள், சிரமதானம், சிறுவர், ஆசிரியர் தின நிகழ்வுகள், இலக்கிய மன்றங்கள், க.பொ.த (சாதாரண தர), (உயர்தர) நிகழ்வுகள், மீலாத் தின நிகழ்வு, இப்தார் நிகழ்வு, பெருநாள் தின நிகழ்வுகள், கலாசார நிகழ்வு, மாணவர் பாராளுமன்ற நிகழ்வுகள் என பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து தொடர்ச்சியாக இடம்பெறச் செய்தார். சம்மாந்துறைக் கோட்டத்தில் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் முன்னணியில் நிற்கின்ற ஒரு கல்லூரியாக நமது அல்மர்ஜான் பேசப்படுகின்றது. அத்துடன் கணித, விஞ்ஞான முகாம்கள் மிகவும் சிறப்பாக வருடாந்தம் ஒழுங்குசெய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆங்கில மொழியில் பேசுவதிலும், எழுதுவதிலும் புலமை பெற்றிருந்த அதிபர் அவர்கள் ஆங்கில மொழி அபிவிருத்தியில் தனித்துவமான வழிமுறைகளை பாடசாலையில் ஒழுங்கு படுத்தினார். நவீன கற்பித்தல் சாதனங்களைக் கொண்ட ஆங்கில மொழிப் பிரிவொன்றை உருவாக்கி காலை ஒன்றுகூடலை ஆங்கில மொழியில் நடாத்தகின்ற அளவுக்கு மாணவிகளை வழிநடத்தினார்.

கலை, இலக்கியத் துறையில் ஈடுபாடுமிக்க குடும்பப் பின்னணியைக் கொண்ட நமது அதிபர் அவர்கள் எழுதுவதிலும், பேசுவதிலும், ஆய்வுகளை மேற்கொள்வதிலும் இயல்பாகவே ஆர்வமுள்ளவராக இருந்தார். சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் வரலாற்றை தொகுத்து 'ஆல விருட்சம்' என்ற பெயரில் சிறந்ததொரு தொகுப்பை நமக்கு வழங்கியிருக்கின்றார். இந்தப் பின்னணியில், தான் சிறிது காலம் கல்விகற்ற அல்மர்ஜானின் வரலாற்றைத் தொகுக்கின்ற முயற்சியை தொடக்கிவைக்கும் முகமாக நீண்டகாலம் இப்பாடசாலையில் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட ஏ.எல்.எம். ஜாபிர் அவர்களின் ஒத்துழைப்புடன் ஆவணக் காப்பகத்தை அப்போதிருந்த நூலகத்தின் ஒரு பிரிவாக உருவாக்கினார். உருவப்ப டங்களை மண்டபத்தில் காட்சிப்படுத்தி வைப்பது இஸ்லாத்திற்கு முரணானது என்பதால் தனியாக ஆவணக் காப்பகத்தை ஏற்படுத்தியமை கல்லூரியின் உருவாக்கத்திற்கும் மேன்மை-க்கும் பங்களிப்புச் செய்தோரை கனம் பண்ணுவதாகவே அமைந்திருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 இல் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக கே.எல். அப்துர் ரசூல் அதிபர் அவர்கள் காலத்தில் வெளியாகிய 'வெண்முத்து' சஞ்சிகை 50 வருடங்களுக்கு முன் நமது பாடசாலை அடைந்திருந்த முன்னேற்றத்தைப் பேசுகின்றது. அப்போதிருந்த அச்சு இயந்திரத்தையும், புகைப்படக் கருவியையும் உச்சளவில் பயன்படுத்தி வெளியிடப்பட்ட இச்சஞ்சிகை அப்போது அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. இப்பாடசாலையில் கடமையாற்றிய உதவி ஆசிரியர்கள்தான் கலாபிவிருத்திக் கழகத்தின் மூலம் கலை இலக்கியத்தை வளர்த்தவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும். வெள்ளி விழாவுக்கு முன்னர் வெண்முத்து வெளியாகி மர்ஜானின் புகழைப் பேசியதுபோன்று பவள விழாவுக்கு முன்னர் அதே தரத்திலான வெண்முத்து ஒன்றை அதிபர் எச்.எம். அன்வர் அலி வெளியிட்டிருப்பது காலத்தின் தேவை அறிந்து அவராற்றிய உன்னத பணியாகவே பார்க்கப்படுகின்றது.

## கல்வி அபிவிருத்தி

சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக தூர நோக்குடன் செயற்பட்ட ஒரு புத்தி ஜீவியாகவே நான் அதிபரை காண்கின்றேன். ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் நமது தாய்ப் பாடசாலைகளான முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயமும் மர்ஜானும் உள்வாங்கப் பட்டமையினால் நமது சமூகம் அடைந்த பாதிப்புக்களை ஆய்வுசெய்து புள்ளிவிபரங்களோடு முன்வைத்ததுடன் அதற்கான தீர்வுகளையும் சமூகத்தின் புத்திஜீவிகளோடும் அரசியல் பிரதி நிதிகளோடும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இன்று நமது ஊரில் இருக்கின்ற தரம் 09 க்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் க.பொ.த (சாதாரண தரம்) வரை தரமுயர்த்தப் பட்டுள்ளமை அவரது இஃலாஸான செயற்பாட்டை அல்லாஹ் பொருந்திக்கொண்டான் என்பதற்கான சான்றாகவே நான் பார்க்கின்றேன். நமது வலயக் கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாக செயற்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். அப்துல் மஜீத் அவர்களின் அயராத முயற்சி இந்த இடத்தில் நினைவுகூரப்பட வேண்டியது.

ஊரின் கல்வி அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கிய அதிபர் எச்.எம். அன்வர் அலி அவர்கள் அல்மர்ஜானை பொறுப்பெடுத்தமை மாற்றத்திற்கான ஒரு பயணமாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. 2020 இல் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்று கின்ற மாணவிகளுக்கான விசேட செயற்திட்டங்களை முன்னெடுத்தமையினால் 58% ஆக இருந்த பெறுபேறு 64% ஆக அதிகரித்தது. அதேபோன்று 25 க்கு மேற்பட்ட மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். இம்முறை (2024) சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கான மேலதிக வழிகாட்டல்கள் வகுப்புக்களை ஒழுங்கு செய்து பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் வழிநடத்தினார். உயர்தரப் பரீட்சை இடம்பெற்ற காலகட்டத்தில் பாடசாலைக்கு அருகிலுள்ள தஃவா இஸ்லாமிய கலாபீடத்தில் அவ்வகுப்புக்கள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். 2024 இல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற கலை, வர்த்தகப் பிரிவு மாணவிகள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தி வருவதுடன் அதிகமான மாணவிகள் சட்டத்துறைக்கு தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற அவாவுடனும், பல்கலைக்கழகத்திற்கு அதிக மாணவிகள் தெரிவு செய்யப்படுவதனூடாக கலை, வர்த்தகப் பிரிவில் இப்பிரதேசத்தில் சாதனை படைக்கின்ற ஒரு கல்லூரியாக அல்மர்ஜான் பேசப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற இலட்சியத்துடனும் அவர் உழைத்துக் கொண்டு வருவதும் பாராட்டத் தக்கதாகும். அண்மையில் வெளியான க.பொ.த உயர்துர பெறுபேறுகளின் அடிப்படையில் வைத்தியத் துறைக்கு ஒரு மாணவியும் சட்ட பீடத்திற்கு ஒரு மாணவியும் 40க்கும் மேற்பட்ட மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவானமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எமது பாடசாலை 87% சித்தி பெற்றமை மற்றுமொரு அண்மைக்கால சாதனையாகும்.

நமது சொத்து, செல்வம் அத்தனையும் நாம் பெறுகின்ற கல்விதான் என்ற சிந்தனையை மாணவிகளுக்கு மத்தியில் ஏற்படுத்தி, வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற அதிகமான மாணவிகள் கற்கின்ற இப்பாடசாலையின் மாணவிகளுக்கு சிறந்த கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக சமூகத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார். அந்தவகையில் அந்நஜா அமைப்பின் ஒத்துழைப்புடன் 2025 இல் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவிகளுக்கான விசேட செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதில் முக்கிய பாத்திரம் ஏற்றுள்ளார். இதில் எமது கல்லூரியின் 40 க்கு மேற்பட்ட மாணவிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். 2024 இல் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை இரு கிழமைக்குள் பாடசாலைக்கு உள்வாங்கப்பட்டு உயர்தர பாடங்களை ஆரம்பிப்பது தொடர்பான சுற்றுநிருபம் வெளியானபோது அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை முகாமைத்துவக் குழு, பாடசாலை சமூகத்துடனும் ஆலோசித்து வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றார்.

கல்வி அபிவிருத்திக்கு அப்பால் நமது ஊரின் தொழுகையாளிகள் தொடர்பாகவும், ஸகாத் வழங்குபவர்கள் தொடர்பாகவும், விவாகரத்து இடம்பெறுவதற்கான காரணங்கள் தொடர் பாகவும் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்த அதிபர் எச்.எம். அன்வர் அலி அவர்கள் அல்லாஹ்தஆலா அவருக்கு வழங்கிய அதிபர் பதவி என்ற அமானிதத்தைப் பயன்படுத்தி சமூக சீர்திருத்தப் பணியில் காத்திரமான பங்களிப்புக்களை அர்ப்பணிப்புடன் வழங்கி வருகின்றமைக்கு பாடசாலையில் அவர் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகள் சான்று பகர்கின்றன. பாடசாலையின் கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான முன்னேற்றம், மாணவிகளின் ஆன்மீக ஒழுக்க விழுமியங்களில் மாற்றத்தை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் கவனம்செலுத்தி வருகின்றார்.

பிரதி அதிபர்களான ஏ.ஆர்.எம். உவைஸ், ஏ.எல்.ஏ. சலீம், ஏ.ஆர். சித்தி சுஜானா, பிரதி அதிபர்களான எம்.எச். நூறுல் ஹிமாயா, யூ.எல்.ஏ. றசீட், ஏ.எம். றிபாஸ், ஏ.எம். சிறாஜுன் நிஸா, மற்றும் எம்.எச்.ஸெஜீலா (உதவி அதிபர்) மற்றும் பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் அவரது நிர்வாகத்திற்கு பக்கபலமாக இருக்கின்றன. மர்ஜானின் முத்துக்களான ஏ.எம். நௌசாத், எம்.ஐ. பௌஸ்தீன், ஏ.எம். அமீர் போன்றோரின் அர்ப்பணிப்பான சேவைகள் இவரது காலத்தில் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளமையும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமாகும்.

**அஷ்ஷெய்க் ARM. ஹஸ்ரப் B.A (நளீமி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த பரிசளிப்பு விழா - 2020

கௌரவ எம்.ஐ.எம். மன்சூர் MP பரிசு வழங்கி வைக்கும்போது





தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் (2023.09.30)
கையெழுத்து போட்டியில் Hand Writing (Print) கலந்து கொண்ட மாணவி
MT. பாத்திமா அப்கா மற்றும் அதிபர் ஆசிரியர்கள், பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ் MP பாடசாலையின் பௌதீக அபிவிருத்தி தொடர்பான கள விஜயத்தின்போது இடம்பெற்ற நிகழ்வு - 2024 ஜுலை





பாடசாலையின் முஸ்லிம் கலாசாரத்தை பிரதிபலிக்கும் 'றபான்' குழுவுடன் அதிபர், ஆசிரியர்கள் - 2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் ஒழுக்க விழுமியங்கள்

சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையால் வெளியிடப்படும் வெண் முத்து என்ற நூலில் பாடசாலையின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான கருத்துக்களை பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவி என்ற வகையில் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன். (அல்ஹம்துலில்லாஹ்)

அந்த வகையில் எமது பாடசாலை 1950.09.01 ம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டது. சம்மாந்துறை வலயத்தில் 1200 பெண் மாணவிகளை மாத்திரம் கொண்ட பெண் தேசிய பாடசாலையாக திகழ்கின்றது. வலயத்தில் சிறந்த பாடசாலை என பெயர் பெறுவதற்கு ஒழுக்கம் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது என்பதை கருதுகிறேன்.

கடந்த காலங்களில் இருந்து இன்று வரை பாடசாலையில் ஒரு சிறந்த ஒழுக்க விழுமியங்களும் அதற்கு என்று ஒழுகாற்றுக் குழு நியமிக்கப்பட்டு ஆசிரியர்களும், மாணவத் தலைவிகளும் அக்குழுவில் உள்வாங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

அந்த வகையில் பாடசாலை ஒழுக்கம் தொடர்பான விடயங்களை முன்னேற்றி பாடசாலையின் செயற்பாடுகளை சிறப்புறச் செய்வதற்காக கடந்த 2023.07.25 எமது பாடசாலை அதிபராக எச்.எம்.அன்வர் அலி (சேர்) அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் புதிய வகையிலான மாணவத் தலைவர்களுக்கான தேர்வு ஒன்று நடத்தப்பட்டு 30 மாணவ தேர்வுகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நேர்முகத்தேர்வில் தோற்றுவதற்கு முன் தரம் 10ற்கு மேற்பட்ட அனைத்து மாணவர்களுக்கும், பாடசாலை நிர்வாகத்தில் ஒன்றான ஒழுங்காற்றுக் குழு மூலம் விண்ணப்பம் மற்றும் மாணவர்களின் திறமைகளை அறிவதற்கான வினாக் கொத்தும் தயாரிக்கப்பட்டு மாணவர்கள் கையில் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவிகளை கௌரவிக்கும் முகமாக சின்னம் சூட்டும் விழா ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒழுக்கக் கோவை தயாரிக்கப்பட்டு அதனுள் சிறந்த சட்ட வழிமுறைகளை உள்ளடக்கி, மாணவத் தலைவிகள், மாணவர்கள் அனைவருக்கும் ஒழுகாற்று குழு தவிசாளரான எம்.எம்.நௌபல் (சேர்), சி.எம்.தில்ஷாத் (சேர்) மற்றும் ஏனைய ஒழுங்காற்றுக் குழு ஆசிரியர்களினால் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது மாணவத் தலைவிகளின் திறமையை வெளிக் கொண்டுவர பல செயற்பாடுகள் நடைபெற்றது. 2023.09.17 திகதியில் கே.எம்.தமீம் (மேஜர்) எனும் வளவாளரினால் வெளிக்கள நிகழ்வொன்று நடைபெற்றது. அதன் போது மாணவர் தலைவிகள் பாடசாலையில் எவ்வாறு தடைகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் போன்ற பல தெளிவு படுத்தல்கள் வளவாளர் மூலம் வழங்கப்பட்டது.

2024.01 பாடசாலையில் தரம் 6 மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அச்சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை ஒழுக்கக் கோவையினூடாக பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவிகளான எ.எ.பாத்திமா அப்னா (SP) எம்.எப்.பஹ்மிதா (ASP) என்பவர்கள் தெளிவாக எடுத்துரைத்தது மட்டுமல்லாமல் தரம் 6 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஒழுக்க கோவை மற்றும் உடன்படிக்கை வழங்கப்பட்டு பெற்றோர்களது பூரண ஒத்துழைப்பினையும் சம்மதத்தினையும் பாடசாலை நிர்வாகம் பெற்றுக் கொண்டது.

இவ்வாறான, பல செயற்பாடுகள் எமது பாடசாலை மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்த முன்னெடுத்து வந்த ஒரு செயற்றிட்டமாகும். இச்செயற்றிட்டத்திற்கு பாடசாலை அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பங்களிப்பினை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது போன்ற செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களிலும் அதிகமான முன்னேற்றத்தை பெற்று தர வேண்டும். இதன் மூலம் பாடசாலையின் உயர்ச்சிக்கும் இத்தகைய செயல்பாடுகள் வழி வகுக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

எமது பாடசாலை ஒழுக்க விழுமியங்களில் கடந்த காலத்திலிருந்து இன்று வரை சிறப்பு பெற்ற பாடசாலையாக விளங்குகின்றது என்பதில் பூரண மகிழ்ச்சியடைகின்றேன். இவ் வகையில் இலங்கை பாடசாலைகளில் **பெண் மாணவிகளுக்கான பர்தா அணியும் முறையினை முதலில் அறிமுகப்படுத்தியது எமது பாடசாலைதான் என்பதை இவ்விடத்தில் நினைவூட்டி பெருமிதமடைகின்றேன்.** இதற்கு ஒத்துழைப்பினை மேலும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் போன்றவை தர வேண்டும் என்பதை கூறிக் கொள்வதோடு இந்நூலில் பாடசாலை ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான விடயங்களை எடுத்துரைக்க வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**ஏ.ஏ. பாத்திமா அப்னா**
சிரேஷ்ட மாணவத் தலைவி,
கமு/சது/ அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி,
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Prefect - 2024



# இதுவரை பாடசாலையில் வெளியான சஞ்சிகைகளில் சில






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பாராளுமன்ற நிகழ்வுகள்







அல்-மர்ஜான் மாணவர் பாராளுமன்றத்தின் 'செங்கோல்'

வடிவமைப்பு:

ஆசிரியர்களான ACM. முஸ்தபா, MM. நௌபல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மாணவர் பாராளுமன்றம் – 2023

கல்வி அமைச்சின் புதிய சுற்றுநிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவையின் அடிப்படையில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் தேர்தல்கள் திணைக்களமும் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் பாராளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மாணவர்களின் தலைமைத்துவ திறன்களை வளர்க்கும் முகமாகவும் ஜனநாயக விழுமியங்களை அரசியல் மாண்புகளோடு பேணும் அடிப்படையில் நேர் சிந்தனையுடைய சிறந்த மாணவர்களை உருவாக்குவதே மாணவர் பாராளுமன்றத்தின் நோக்கமாகும்.

இதன் அடிப்படையில் எமது பாடசாலையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 2017 ஆம் ஆண்டு கல்லூரியின் அப்போதைய முதல்வர் திருமதி அபிரா சலீம் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் புதிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக எமது பாடசாலையான கமு/சது/அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையில் 25.09.2023 ஆம் திகதி கல்லூரியின் அதிபர் திரு எச்.எம். அன்வர் அலி தலைமையில் தேர்தல் நடாத்தபட்டு வாக்குகள் எண்ணும் பணிகளும் நடைபெற்று அந்நாளிலே முடிவுகளும் அறிவிக்கப்பட்டன.

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற அமர்விலே பிரதிக் கல்வி பணிப்பாளரும் மாணவர் பாராளுமன்ற வலய இணைப்பாளரும் மும்மொழி இணைப்பாளருமான திரு எச். நைரோஸ்கான், பிரதிக் கல்வி பணிப்பாளரும் வலுவூட்டப்பட்ட பாடசாலைகளின் மேம்பாட்டு திட்ட இணைப்பாளருமான திருமதி எம்.ஏ.சி. நிலோபரா, சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் அதிபர் திரு. எம்.டி.எம் ஜனோபர் ஆகியோருடன் சகோதர மொழிப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் செயலாளர் நாயகமாக எமது பாடசாலையின் அதிபர் எச்.எம் அன்வர் அலி திகழ்ந்தார். பிரதி செயலாளர் நாயகங்களாக பிரதி அதிபர் அக்ஷ்கெஷய்க் ஏ.ஆர்.எம் உவைஸ் நளீமி மற்றும் ஆசிரியர்களான திரு.ஏ.எல்.நபார், திரு. சி.எம். தில்ஷாத், திரு. யு.கே. சதக்கதுல்லாஹ், திரு. எம்.எச். கபீர், திரு எம்.டி அஹத் ஆகியோர்கள் செயற்பட்டனர். மேலும் செயற்குழு உறுப்பினர்களாக ஆசிரியைகளான திருமதி எம்.எச் ஜெசிலா, திருமதி மும்தாஜ் ஹமீத், திருமதி யு.எல் பஸ்லூனா, திருமதி ஏ.ஆர்.எஸ். றுசானா ஆகியோர் அரும் முயற்சியில் ஈடுபட்டனர். அதுமட்டுமன்றி திரு. எம்.எம் நௌபல், திரு ஏ.சி.எம் முஸ்தபா ஆகிய ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் எமது பாடசாலை பாராளுமன்றத்திற்கான செங்கோலும் தயாரானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24175(R)

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நடவடிக்கைகளானது 2023.12.12 ஆம் திகதி கௌரவ சபாநாயகரின் தலைமையில் காலை 9.30 தொடக்கம் நண்பகல் 12.30 வரை முன்னெடுக்கப்பட்டு சபை ஒத்திவைப்பு பிரேரணையுடன் இனிதே நிறைவுற்றது.

இதன் பின்னர் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக தேசிய மாணவர் பாராளுமன்றம் உருவாக்குவதற்கு அனைத்து கல்வி வலயங்களிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் சம்மாந்துறை வலயத்திலிருந்து எமது பாடசாலையான கமு/சது/அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவியான செல்வி. எம்.பி பாத்திமா ஷாஜிதா (உயர்தரம் - கலைப்பிரிவு) அவர்களுக்கும், கமு/சது/நாவி-தன்வெளி வித்யாலய மாணவி செல்வி. டி பிரனித்தா (உயர்தரம் - கலைப்பிரிவு) அவர்களுக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அதனை முன்னிட்டு 2023.03.26 ஆம் திகதி, தெரிவான மாணவர்கள் வலயத்திலிருந்து மாகாண கல்வி திணைக்களத்தினூடாக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 2023.03.27 ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தில் இம்மாணவர்களுக்கான தேர்தலும், தலைமைத்துவ பயிற்சிகளும் இடம்பெற்றன. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தில் 2023.03.28 ஆம் திகதி தேசிய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு, எமது நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வருகையோடு கல்வி அமைச்சின் செயலாளர் கௌரவ வசந்த பேரேரா அவர்களும், ஜனாதிபதி செயலாளர் கௌரவ இ.எம்.எஸ்.பி ஏகநாயக அவர்களும், மற்றும் தேசிய பாராளுமன்ற தேர்தல் ஆணை-யாளர் கௌரவ குஷானி ரோஹனாதீர அவர்களும் மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகங்களாக செயற்பட்டனர். இத்தேசிய மாணவர் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் மாணவன் டபிள்யு.எம். தினக வர்ணசூரிய தலைமையில் தேசிய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இனிதே முற்றுப் பெற்றது.

இவ்வாறு தேசிய ரீதியில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத்திற்கு எமது பாடசாலை மட்ட மாணவர் பாராளுமன்ற சபை முதல்வர் (மாணவத் தலைவி) செல்வி. எம்.பி பாத்திமா ஷாஜிதா ஆகி நான் மேற்படி அமர்வில் பங்குபற்றியமையானது எமது பாடசாலைக்கும் எமது சம்மாந்துறை வலயத்திற்கும் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாக கருதுகின்றேன். இவ்வாறு அனைத்து துறைகளிலும் தேசிய ரீதியில் பங்குபற்றி பல்வேறு சாதனைகளை நிலைநாட்ட எமது மாணவர் சமூகம் திடசங்கற்பம் பூணுவோம்.

**M.B. பாத்திமா சாஜிதா**
உயர்தரம் (கலைப்பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Mother ශ්‍රී ලංකා' Project RUN செயற்றிட்டம்

ஜனாதிபதி செயலகத்தின் மதர் ஸ்ரீ லங்கா நம்பிக்கைப் பொறுப்பு நடாத்தும் Project RUN பாடசாலை மட்ட நிகழ்ச்சித் திட்டமானது, கல்வி அமைச்சுடன் இணைந்து நாட்டின் பாடசாலை முறைமையினுள் Project RUN செயற்றிட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் தொனிப் பொருளானது, பொறுப்புள்ள பிரஜை (Responsible citizen), சமூக ஐக்கியம (Unity), தேசாபிமானம் (National Pride) ஆகிய முக்கிய மூன்று அம்சங்களை உள்ளடக்கி உள்ளது. இதனை RUN என்ற ஆங்கில சுருக்க எழுத்து விளக்குகின்றது.

எமது பாடசாலையானது Mother ශ්‍රී ලංකාProject RUN செயற்றிட்டத்தில் அங்கத்துவத்தை 2008 ஆம் ஆண்டு முதல் பெற்றுக் கொண்டுள்ளது.. இத்திட்டத்தின் செயலாளராக எம்.எம். நஸ்மியா ஆசிரியை, ஏ.சித்தி சுஹைறா, கே.எம்.சாலிஹா ஆகிய ஆசிரியைகள் அதிபர் அபிரா சலீம் அவர்களின் தலைமைத்துவ வழிகாட்டலில் செயற்பட்டு வந்தனர். இச்செயற்றிட்டத்தின் மூலம் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் நாடகத்தை அரங்கேற்றி போட்டியில் வெற்றி பெற்றிருந்தனர். இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டு Mother ශ්‍රී ලංකා Project RUN திட்டத்தின் தேசியமட்ட அங்கத்துவத்திற்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றிருந்தது.

2013 ஆம் ஆண்டு Mother ශ්‍රී ලංකා Project RUN திட்டத்தின் கீழ் கோரப்பட்ட விண்ணப் பத்திற்கு அமைவாக எமது பாடசாலையின் விடுதி கட்டிடத்தின் ஒரு பகுதியை "புவியியல் அறை"யாக, மிக நுட்பமாகவும், தத்ரூபமாகவும் தயார் செய்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இங்கு முப்பரிமாண தோற்ற அடிப்படையில் புவியியல் சார் அம்சங்களை சித்தரிக்கின்றதும் மாணவர்களுக்கு சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்தக் கூடியதுமான இப்புவியியல் அறை, சம்மாந்துறை வலயத்தில் பேசு பொருளாக மாறியது. இச்செயற் பாடானது மாகாண மட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு 2014இல் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற தேசிய விழாவில் பங்கு பற்றி விருதினை பெற்றுக் கொண்டது.

இது அதிபர் அபீரா சலீம் அவர்களின் வழிகாட்டலில், தலைவர் எம்.எச். ஜௌவுசன் சக்கியா, யூ.எல்.ஏ. றசீட் (DP), எம்.எம். பரீதா, எம்.றி. ஜெஸ்மின், ஏ.சி.எம்.முஸ்தபா, ஐ.றிபாயா, எம்.எம்.எம்.நிம்சாத், ஏ.ஜி.எம். நதீர், ஏ.எம். முபாறக் ஆகிய ஆசிரியர்கள் மாணவர்களுடன் இணைந்து சிரமங்களுக்கு மத்தியில் இச்செயற்றிட்டத்தினை மிக சிறப்பாக நிறைவேற்றி இருந்தனர். இதனை அடுத்து 2017 ஆம் ஆண்டு Mother ශ්‍රී ලංකා Project RUN திட்டமானது பாடசாலையின் "அதிபர் காரியாலயத்துக்கு முன்னால் உள்ள நிலப்பகுதியை பூந்தோட்டமாக மாற்றுதல்" என்னும் தலைப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்கு எம்.எம். நௌபல் ஆசிரியரின் தலைமையில், எம் எம் நூருல் ஹிமாயா பிரதி அதிபர், ஏ.ஜி.எம். நதிர், எம் எச். ஜௌஸன் சக்கியா, ஏ.சி.எம். முஸ்தபா, எம்.எச். அன்வர், எம்.எப். பௌஸியா, ஐ.எல்.எஸ். நௌபியா, எம்.றி.ஜெஸ்மின் ஆர்.எம். சியாம், திருமதி மும்தாஜ் ஹமீட் ஆகிய ஆசிரியர்கள் செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அபீரா சலீம் அவர்களின் ஓய்வினைத் தொடர்ந்து யு.எல். லாபிர் பொறுப்பு அதிபராக செயற்பட்டார். இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு எமது மாணவர்கள் சமூக நல கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் ஸ்டிக்கர்களை பிரிண்ட் செய்து பொதுமக்கள் மத்தியில் விற்பனை செய்தனர். இதன் மூலமாக கிடைத்த நிதியினை பயன்படுத்தி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது மாணவர்களுக்கு பெரும் உத்வேகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியதோடு புதிய அனுபவத்தினையும் பெற்றுக் கொடுத்தது, என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் காரணமாக மாணவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இச்செயற்றிட்டத்தின் வெற்றிக்காக உழைத்தார்கள் என்பது வெளிப்படையாகும். பூந்தோட்டத்தை அமைப்பதற்காக ஆசிரியர்கள் நெயினாகாடு கல்வாடிகளுக்கு சென்று செங்கற்களை அன்பளிப்பாக பெற்று வந்தனர்

அத்துடன் இதற்கு தேவையான நிலத்தை பண்படுத்துதல், நீர்ப்பாசனம், பூச்சட்டிகள் கொண்டு வருதல், பூ மரங்கள் ஆகியவை மாணவர்களின் அன்பளிப்பாகக் கிடைத்தன. அத்துடன் மேலும் உள்ளக அலங்கார வேலைகளை ஆசிரியர்களும் மாணவர்களுமாக சேர்ந்து மேற் கொண்டிருந்தார்கள். இத்திட்டமானது மிகச் சிக்கனமாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றப் பட்டதுடன், கவனிப்பாரற்றிருந்த பாடசாலை முகப்புப் பகுதியானது மிகவும் பசுமையாகவும், காலை வேளையில் பாடசாலை வளாகத்தில் நுளைகின்ற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் புத்தாக்கத்தை அளிக்கக் கூடியதாகவும் மாறியிருந்தமை ஒரு விசேட அம்சமாகும். உண்மையில் இது எமது ஆசிரியர், மாணவர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த சிறந்த வெற்றியாகும். எமது செயற்றிட்டம் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்றி பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டது. அத்துடன் இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு வதிவிட தலைமைத்துவ பயிற்சி நிகழ்வுகளில் பங்கு பெறும் வாய்ப்பினை Mother ஸ்ரீ லங்கா Project RUN செயற்றிட்ட குழு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது பாடசாலைக்கு Mother ஸ்ரீ லங்கா Project RUN செயற்றித்திட்டத்தில் அங்கத்துவம் கிடைத்த நாள் முதல் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் முழுமையாக ஈடுபட்டதனால் பாடசாலையின் பெயரையும் புகழையும் தேசிய அரங்கில் ஓங்கச செய்வதிலும், எமது பாடசாலையின் தேசிய அடையாளத்தை நிலைநாட்டுவதிலும், இச்செயற்றிட்டமானது பாரிய பங்கை ஆற்றி இருக்கின்றது என்பது மிகையாகாது.

இவ்வாறான இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாடசாலையின் பெயரையும், புகழையும் தேசிய ரீதியாக ஏனைய பாடசாலைகள் மத்தியில் நிலைபெறச் செய்கின்றன. கொரோனா பெருந்தொற்று காரணமாக 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் Mother ஸ்ரீ லங்கா Project RUN செயற்திட்டமானது தொய்வு நிலையை எதிர்வு கொண்டது. இதன் பின் 2021ஆம் ஆண்டு ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆசிரியரின் தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனை மீண்டும் வலுவூட்டுவதன் மூலம் எமது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளை தேசிய அரங்கில் மீண்டும் பரிணமிக்கச் செய்யலாம் என்பதே எமது பாரிய எதிர்பார்ப்பாகும்.

**M.M. நௌபல் - ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்முத்தே ஒளிர்கவே

சம்மாந்துறையின் சரித்திர நாயகியே
வெண்முத்தாய் வெண்கதிர் வீசிடும்
மங்கையர்களின் மணிமகுடம் மர்ஜானே....

கல்வித் தாகம்
கனவுகளோ அதிகம். கனவாண்கள் சிலர்
கரம் கோர்க்க களை பிடுங்கி காடுவெட்டி
கடின உழைப்பில்
கருவாட்டுக்கல் வித்தியாலயமாய்
அழகாய் அவதரித்தாய் அவனியில்.

அன்னை மடியில்
இரு பாலாரும் இணைந்தே மனமகிழ்வாய்
நற்கல்வியினை
பெற்றுச் செழுமையடைந்தனரே.

காலநகர்வில் சமூக நலன்
சமத்துவம் என
பெண்கல்வியின் கேள்வியும் எழுச்சியடைய
விழுமியங்களின் விதை
நிலமாய் மலர்ச் சுனைகளின்
பெரும் ஊற்றாய் அறிவுக்கூடமாய்
தளைத்தோங்கியதே.

ஏழு தசாப்தங்களில் எட்டுத்திக்கிலும்
பரிணமிக்கும் மாணிக்க மாதர்கள்
மர்ஜான் மண்ணில் அவதரித்தனரே.
முத்தான அதிபர்களின்
முழுமூச்சான பணிகளும்
அல்லும் பகலுமாய்
அர்ப்பணிப்பான நகர்வுகளும்.
தோளோடு தோளாய் தோழமையுடன்
ஏணியாய் தோணியாய்
அஞ்ஞானம் அகற்றிய ஆசான்களும்
விதைத்த விதைகள் விருட்ஷங்களாய்
மாறியே வையகமெங்கும்
வாசம் வீசுகின்றதே.

மர்ஜானின் வெண்முத்துக்களால்
கோர்த்த மணி ஆரத்தில் ஒருமுத்தாய்
நானும் இலங்கிடவே
என்னைச் செதுக்கிய விளைநிலமே வாழிய
வாழியவே...

கல்வியோடு கலைகளுமாய்
சாதனைகளைச் சாத்தியமாக்கிடவே
ஆராதித்த அன்னையே...
மாண்புற்று மங்காமல் ஒளிர
மங்களமாய் வாழ்த்துகிறேன்.
வாழ்க.. வளர்கவே...

எங்கள் மர்ஜான்
வெண்முத்தே வெண்மதியே
வையகம் வாழும் வரை ஒளிச்சுடராய்
ஜொலித்திடவே தூய ரஹ்மானே
துணை புரிவாயே..
ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எம்.எம். மஹீஷா பானு** SLPS III
அமெரிக்காவிலிருந்து பழைய மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வளர்ச்சிப் படிகள்

| | |
|---|---|
| 1950.09.01 | கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (தரம் 1 – 5 வரையான வகுப்ப ஆரம்பம்) |
| 1955.11.07 | தரம் 06 வகுப்பு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1960 | புலமைப்பரிசில் பரீட்சையில் இருவர் சித்தியடைந்தனர். |
| 1965.11.17 | அல்மர்ஜான் வித்தியாலயம் என பெயர்மாற்றம் பெற்றது. |
| 1973.02.03 | 'வெண்முத்து' வெள்ளி விழா மலர் வெளியிடப்பட்டது. |
| 1975.01.01 | கா.பொ.த சாதாரண பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 1986.09.26 | கலை வர்த்தக பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 1987.02.27 | மஹா வித்தியாலயம் தரம் 1C யாக தரமுயர்த்தப்பட்டது. |
| 1992.06.03 | கல்வி சாரா ஊழியர் நியமிக்கப்பட்டது. (Mr. AM.நௌசாட்) முதல் நியமனம் |
| 1995.01.30 | அல்-மர்ஜான் முஸ்லிம் பெண்கள் கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டது. |
| 1997.07.23 | 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. |
| 1999.07.30 | A/L விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2005.01.01 | ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது (English Medium) |
| 2017.01.01 | தொழிநுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2019.03.01 | அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 1AB ஆக தரமுயர்த்தப்பட்டது. |
| 2020 | பாடசாலை பழைய மாணவர் அமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 2024 | English Development Unit ஆரம்பிக்கப்பட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாட விதான செயற்பாடுகள்

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை (1950-2024) பல்வேறுபட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவிகள் ஈடுபாட்டுடன் பங்கு பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில்

- ☒ விளையாட்டுப் போட்டிகள்
- ☒ கலாச்சாரப் போட்டிகள்
- ☒ தமிழ் தின போட்டிகள்
- ☒ சித்திரப் போட்டிகள்
- ☒ சமூக விஞ்ஞான போட்டிகள்
- ☒ அனர்த்த முகாமைத்துவ போட்டிகள்
- ☒ ஆங்கிலதினம்
- ☒ சிங்களதினம்
- ☒ முஹர்ரம்
- ☒ மீலாதுன் நபி விழா
- ☒ மாணவர் பாராளுமன்றம்
- ☒ புவியியல் ஒலிம்பியாட்
- ☒ இரசாயனவியல்
- ☒ விவசாய சந்தை
- ☒ சுற்றாடல் கழகம்
- ☒ சாரணியம்
- ☒ முதலுதவி
- ☒ மதர் ஸ்ரீலங்கா
- ☒ மாணவர் மன்றம்
- ☒ கண்காட்சி
- ☒ போக்குவரத்து சமிக்ஞை பிரிவு
- ☒ களப்பயணங்கள்
- ☒ சுற்றுலாக்கள்

போன்ற துறைகளில் எமது மாணவிகள் பங்குபற்றி தேசிய ரீதியான சாதனைகளை படைத்துள்ளனர்.

# சாரணியம்

1990 இல் எமது பாடசாலையின் சாரணியர் இயக்கம் 5 ஜனாதிபதி விருதுகளை பெற்றதுடன் 1990ல் இடம்பெற்ற சார்க் அமைப்பின் சர்வதேச உச்சி மாநாட்டிலும் எமது சாரணியர் இயக்கம் பங்குபற்றி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது . எமது பாடசாலையானது மகளிர் கல்லூரியாக மாறியதன் பின்னர் (1994) சாரணிய இயக்கமானது வீழ்ச்சியின் பாதையை நோக்கி பயணித்த போதிலும் அதிபர்களான எஸ்.எச்.எம்.முஸ்தபா, கே.எம்.எஸ்.எம்.தமீம், கே.எல்.ஏ.தகூல் ஆகியோரின் காலப்பகுதிகளில் வலுவூட்டப்பட்டதோடு 2020 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற எச்.எம்.அன்வர் அலி அவர்களினால் அல-மர்ஜானின் சாரணியம் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றது. மேலும் பல அதிதிகளை வரவேற்பதில் எமது சாரணியர் இயக்கம் மரியாதை அணிவகுப்புகள் நடத்துவதில் ஈடுபட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஜானின் உயர்தரப்பிரிவு

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம் எல்லாப் புகழும் ஏக வல்லோனான இறைவனுக்கே!

கமு/சது/அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி மற்றும் உதவி அதிபராக கடமையாற்றிய சுமார் ஏழு வருடங்களில் அல்-மர்ஜானின் உயர்தரத்தினுடைய கல்வி வளர்ச்சிப் பாதை பற்றிய சில கருத்தாடல்களை முன் வைக்கலாமென நினைக்கின்றேன்.

2018ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையிலான க.பொ.த உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் ஆராயும் போது பல சவால்களுக்கு மத்தியில் இப்பாடசாலை பல மாணவர்களை சித்தி அடையச் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வெற்றி கண்டுள்ளது. மருத்துவத்துறை, தாதியர்த்துறை, உயிர்முறைத் தொழிநுட்பத்துறை, முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞானம்,கலை,வர்த்தக பட்டதாரிகளை உருவாக்கியதுடன் கல்விக் கல்லூரிகளுக்கும் மாணவர்களை அனுப்பி சாதனை படைத்துள்ளது.

ஆயினும் நாணயத்திற்கு இரு பக்கம் இருப்பது போல் இப்பாடசாலையின் உயர்தரப் பிரிவை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல பல சவால்களையும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தனியார் வகுப்புகளின் ஆதிக்கம், மாணவர்களின் பாடசாலை வரவு வீழ்ச்சி, பெற்றோர் சந்திப்புகளில் ஆண்களின் பங்களிப்பு வீதம் குறைவு, க.பொ.த சாதாரண தரத்தில் விஷேட சித்தி பெற்ற மாணவர்களின் வெளியேற்றம், வெளி வளவாளர்களைக் கொண்டு விஷேட கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமை, தொகுதிப் பாடங்களை நடாத்துவதற்கு வகுப்பறைகள் இன்மை போன்ற காரணங்களினால் எமது பாடசாலை தாக்கத்திற்கு உட்பட்டாலும், இச்சவால்களை முறியடித்து இம்முறை 87% சித்தி வீதத்துடன் வெற்றி நடை போட்டு வீறு கொண்டெழுந்து நிற்கின்றது.

இவ்வெற்றிப் பயணத்திற்கு முக்கிய காரணமாய் அமைவது உயர்தரப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பகுதித் தலைவர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளாகும். இவ்விடத்தில் முன்னாள் அதிபர் எம்.ஐ.மீரா முகைதீன், தற்போதைய அதிபர் எச்.எம்.அன்வர் அலி, முன்னாள் கலை வர்த்தகப் பிரிவு பகுத்தலைவர்களாக பணியாற்றிய எம்.எம்.நவ்பல், ஏ.ஆர்.எம்.ஹஸ்ரப், விஞ்ஞானப்பிரிவு Mrs. H.M. சரீன், தொழில்நுட்ப பிரிவு பகுதித்தலைவர் A.L. மஜீட் ஆகியோரையும் நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன்.

அது மாத்திரமன்றி இரவு - பகல் பாராது பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு இவ்வெற்றிக்குக் காரணமாய் நிற்கும் உயர்தரப் பிரிவு ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

இனிவரும் காலங்களிலும் இன்னும் பல வெற்றிகளை இம் மண்கொண்டாட வேண்டும். அதற்கான பூரண ஒத்துழைப்புக்களும் எம் மர்ஜான் குழாத்தினரிடமிருந்து கிடைக்கும் என்பதில் எத்தகைய ஐயமும் இல்லை.

**A.L.A. சலீம்** (SLPS)
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஜானே! நீ வாழ்க!

சரித்திரங்கள் நிறைந்திட்ட
சம்மாந்துறையூரில்
காடுகள் சூழ்ந்திட்ட
கருவாட்டுக் கல்லில்
ஆயிரத்தித் தொள்ளாயிரத்தைம்பது
புரட்டாதித்திங்கள் முதலாம் நாளில்
ஆறு மகான்களின்
அயராத முயற்சியால்
ஓலைக் குடிசையில்
உதயம் கண்டது ஒளி விளக்கு..
"கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம்
கலவன் பாடசாலை"
எனும் பெயர் அதற்கு..

ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி
அறுபத்தேழாம் ஆண்டினிலே
அதிபர் மணி கோஸ் முகம்மதுவின்
அர்ப்பணிப்பின் பயனாய்
"அல்-மர்ஜான்" என்னும்
அழகு நாமம் பெற்றது..

அன்னையர் விளைநிலமாய் - நல்
ஆளுமை விழுதுகளின்
ஆலமரமாய் - உன்
பார் போற்றும் பேறு கண்டு
பேரானந்தம் கோடி..

துறையூரின் மத்தியிலே
பிரதான வீதியிலே
அறிவூற்றாய் வீற்று
துறைகள் பல வென்று
நாவிற்கினிய நற்றமிழ்
நாற்றிசை ஈர்க்கும் ஆங்கிலம்
இரு மொழியும் இணைந்து
இரு மொழிப் பிரிவுடன்
பதிவு கண்ட பயணத்தில் - எம்
மர்ஜானெனும் வெண்முத்து..

தடங்கல்கள் தாண்டி - பல
தடயங்கள் வேண்டி
தரமான கல்விக்காய்
தவித்திட்ட மகளிருக்காய்
பெண் முத்துக்கள் நிறைந்த
வெண்முத்தாய் அவதரித்து
ஆண்டுகள் முப்பது
ஆகின்றன இன்று..

வயதுகள் ஏறிடவே
வசீகரமும் கூடியது
திரும்பும் திசையெங்கும்
விரும்பி நோக்கும் வண்ணமாய்
இயற்கையின் வனப்புடன்
எல்லையில்லா எழில் மையம்..

அறிவுத்தாகம் தீர்த்திட
அமைந்திட்ட நூலகம்
காலைக் கூட்டத்தை
கலகலப்பாக்கும் மரநிழல்
ஓடித் திரிந்து விளையாட
ஓரமாய் மைதானம்
கற்றலுக்குகந்தாற் போல்
கண்கவர் வகுப்பறைகள்
தரமான தலைமைகள் - கல்விக்கு
உரமான உறுதுணைகள்
வளமான மண்ணிதனை
வரமாய் பெற்ற
மாணவிகள் நாங்கள்..

தரிசு நிலத்தில் பிறந்து - உன் மடியில்
தவழ்ந்து
தத்தளித்து நடை பயின்று
தரணியாளும் மகான்களாய்
மிளிர்வது கண்டும் மிடுக்கின்றி
பவள விழா நோக்கி
பயணிக்கிறாய் நன்று..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நூலாம் "வெண்முத்து"
வரிவரியாகச் சொல்லும் - உன்
வற்றாத வரலாற்றை இன்று

இரண்டாயிரத்திப் பத்தொன்பது
பங்குனி முதலாம் நாள்
தேசிய பாடசாலையாய்
தரம் உயர்ந்த செய்தி கேட்டு
தரணியெங்கும் கொண்டாட்டம்..

கணித விஞ்ஞானம்
கலை வர்த்தகம்
உயிர் முறைத் தொழிநுட்பம் - என
பாதைகள் பல காட்டி
மேதைகள் கண்டாய்..

அல்லல்பட்ட ஏழைகளை
அன்பாய் அரவணைத்து
பண்பாய் அறிவூட்ட
பிறப்பெடுத்த மர்ஜானே!
மண்ணுக்காய் உன் சேவை
மணக்கிறது உலகெங்கும்..

வார்த்தைகள் போதாது - உனை
வாழ்த்திக் கவிபாட
புது வரிகள் தேடுகிறேன் - உன்
புகழுக்கு துதி பாட
வாழ்க நீ!
வளர்க பல்லாண்டு!
வையகம் பெறுக
வளமான உன் சேவை!!!..

வரிகள்
**திருமதி எம்.ஐ.அஸ்மத் பானு**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கல்லூரியின் பழைய மாணவி
(2014 A/L Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்–மர்ஜான் எனும் "வெண்முத்து"

கிழக்கிலங்கையின் புகழ் பூத்த மண்ணாகத் திகழும் சம்மாந்துறையின் நடுமத்தியில் கல்முனை-அம்பாறை வீதியில் அழகுற காட்சியளிக்கும் எமது கல்லூரி குறிப்பிட்டு கூறக்கூடிய பல நலன்களுடன் அழகுற காட்சி அளிக்கின்றது.

1949 ஆம் ஆண்டு காலத்திலே வெறும் தரிசு நிலமாக புற்களும், புதர்களும், முட்களுமாய்க் கிடந்த இந்த அல்-மர்ஜான் நிலத்தினை செப்பனிட ஆலோசித்தனர் பெரியோர்கள் சிலர். அதற்கு அடிநாதமாய் உழைக்கத் தொடங்கினார்கள் எமது பாடசாலையின் ஸ்தாபகர்களாய் திகழும் ஆறு மகான்கள். அந்த ஆறு மகான்களின் உன்னத சேவையினை இன்று அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யின் அதிபராகவும் இந் நூலின் பிரதம ஆசிரியருமான ஜனாப் எச்.எம். அன்வர் அலி சேர் அவர்கள் தனது பதிவேடுகளில் சிறப்புற நினைவு கூருகின்றார்.

அவ்வாறு ஸ்தாபகரகள் அறுவரின் பெரு முயற்சியினால் -தியாகங்களினால் 1950ஆம் ஆண்டு ஆடித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் '50X20' அகலம் கொண்ட ஓலைக் கட்டிடத்தில் அன்றைய கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் திரு வி.எஸ்.எம்.டெல் அவர்களினால் "கருவாட்டுக்கல் முஸ்லிம் பாடசாலை" என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. எனினும் 1950 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் முதலாம் நாளிலேயே இப்பாடசாலை அரச அங்கீகாரத்தின் கீழ் உள்வாங்கப்பட்டமை குறிப்பிட்டு கூறக்கூடிய விடயமெனலாம். இவ்வாறு பல சவால்களுக்கு இடையில் ஊரின் முக்கிய பிரமுகர்கள் என்றழைக்கப்பட்ட பலரின் எதிர்ப்புகளை முறியடித்து உருவாக்கப்பட்ட இப்பாடசாலை பல வளர்ச்சிப் போக்குகளை தன்னகத்தே வெளிப்படுத்தின. அதற்கு அன்றைய அதிபர்களின் விடாமுயற்சிகளே முக்கிய காரணம் எனலாம். இந்த வகையில் இதன் வளர்ச்சியில் மற்றொரு மைக்கல்லாக 1965 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ஆம் திகதி தொடக்கம் அல்-மர்ஜான் என்ற அழகு நாமத்தை எமது பாடசாலை சூடியது. அன்று அதன் அதிபராய்த் திகழ்ந்தவர் அதிபர் மணி எம்.ஐ. கோஸ் முகம்மது அவர்களாவார்.

இவரது காலத்தில் இப்பாடசாலை கலை நிகழ்ச்சிகளிலும் விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கியமை குறிப்பிட்டு பேசக்கூடிய விடயம் எனலாம். இதற்கு அடுத்தபடியாக அதிபராக கடமையாற்றிய மர்ஹூம் ஜனாப் கே.எல்.ரசூல் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு பெரும் முயற்சி வெற்றி கண்டது. இவரது காலத்தில் வெள்ளி விழாவை அணமித்த எமது பாடசாலையானது

1973-ல் "வெண்முத்து" என்ற பெயரில் குறிப்பிட்டு பேசக்கூடிய ஒரு சஞ்சிகையினை அச்சில் வெளியிட்டது. இது சம்மாந்துறையின் வளர்ச்சியில் குறிப்பாக அல்-மர்ஜானின் வளர்ச்சியில் பெருமைக்குரிய ஒரு அருமையான முயற்சி என்று அன்றைய பொத்துவில் தொகுதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினரும் இவ்வூரின் முதல் பட்டதாரியுமான மர்ஹூம் ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீது (எம்.பி) அவர்கள் வெண்முத்து ஆசிச் செய்தியிலே குறிப்பிட்டுக் கூறுகின்றமை இச்சஞ்சிகையினது வரலாற்று தடத்தினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடக் கூடியதோர் அம்சமாகும்.

1987 ஆம் ஆண்டில் எமது பாடசாலை 01சி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு உயர்தர கலை வர்த்தக பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது ஜனாப் யூ.எம்.முஹிடீன் அதிபர் அவர்கள் அதிபராக கடமை ஆற்றினார்கள். தொடர்ந்து ஜனாப் யு.எல்.அலியார் (MA) அவர்கள் அதிபராய் மிளிர்ந்து உயர்தர வகுப்புக்களின் வளர்ச்சியில் பங்காற்றினார். அதன் பேறாய் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்கு இப்பாடசாலையில் இருந்து கலை வர்த்தக பிரிவு மாணவர்களாய் 15 மாணவ மாணவிகள் தோற்றினர். அப்பரீட்சையில் கலைப் பிரிவினைச் சேர்ந்த ஒருவர் இப்பாடசாலையின் முதன்முதலாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். அதனை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக அனுமதியானது அதிகரித்துக் கொண்டே வந்துள்ளமையினை சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

இதன் வளர்ச்சியின் பேறாய், சம்மாந்துறையின் நடுமத்தயில் உள்ள இப்பாடசாலையானது ஒரு மகளிர் கல்லூரியாக மாற்றப்பட வேண்டுமென்று அன்றைய அதிபரோடு இணைந்த ஆசிரிய குழாத்தினரதும் முழு முயற்சியால் 1990 ஆம் ஆண்டு முதல் பெண் மாணவிகளுக்கான அனுமதியை மட்டும் வழங்கியது. எனினும் 1994 ஆம் ஆண்டு முதலாகக்கொண்டே இப்பாடசாலை மகளிர் கல்லூரி என்ற நாமத்தை பொறிக்கக் கூடியதாய் ஆயிற்று. இக்கால கட்டத்திலேயே நமது இன்றைய ஆராதனை மண்டபமும் அன்றைய வர்த்தக வணிகத்துறை அமைச்சராக விளங்கிய கௌரவ ஏ.ஆர்.எம் மன்சூர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் எமக்கு கிடைக்கப்பெற்றது. இக்கட்டிடத்தின் திறப்பு விழாவினை ஒட்டி 1994 தைத்திங்கள் 22 ஆம் நாளன்று திறப்பு விழா மலரும் வெளியிடப்பட்டது. 1998 ஆம் ஆண்டளவில் மர்ஹூம் ஜனாப் எஸ்.எச்.எம் முஸ்தபா அதிபர் அவர்களின் காலத்தில் விஞ்ஞானப் பிரிவுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றதையடுத்து எம்.ஐ. உம்முல் ஹுஸ்னா வைத்தியத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு இப்பாடசாலையில் முக்கிய திருப்பத்தினை ஏற்படுத்தினார். ஆதனைத் தொடர்ந்து கணித பிரிவும் 2010 முதல் செயல்பட தொடங்கியது.

28.02.2018 ஆம் திகதியன்று திருமதி அபீரா சலீம் அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அதிபராக நியமிக்கப்பட்ட ஜனாப் யூ.எல்.லாபிர் அதிபர் அவர்களின் காலத்தில் தொழிநுட்பப்பிரிவும் ஆரம்பித்து வைக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் வெற்றிகரமாய் விளங்கத் தொடங்கிற்று.

இக்கால கட்டத்திலேயே 01.03.2019ல் இப் பாடசாலையானது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமை ஒரு வரலாற்றுப் பதிவு எனலாம். இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர் ஜனாப் எம்.ஏ.ஹசன் அலி அவர்கள் உறுதுணையாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல வளர்ச்சிக் கட்டங்களில் முன்னேறி வந்த எமது அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையானது இன்று ஜனாப் எச்.எம்.அன்வர் அலி (BA,MA,PGDE,Dip in Eng) SLPS1 அவர்களின் தலைமையின் கீழ் பிரதி அதிபர் ஜனாப் அஷ்ஷேக் ஏ.ஆர.எம்.உவைஸ் (நளீமி) அவர்களையும், ஏனைய உதவி அதிபர்களையும் கொண்டு அதன் நிர்வாக கட்டமைப்பு சிறப்பாக இயங்குகிறது எனலாம். 1250 மாணவிகளுடன் 97 ஆசிரிய ஆசிரியைகளும் இதன் வளர்ச்சியின் பிரதான பங்காளிகளாக உழைத்துக் கொண்டிருப்பது மாத்திரமல்லாது 13 அபிவிருத்தி உத்தியோகத்துர்களும் கடமையாற்றுகின்றனர்.

மேலும் இப்பாடசாலையின் கல்வி சாரா பணியாளர்களும் குறிப்பிட்டு பேசக்கூடியவர்களாக திகழ்கின்றனர். அந்த வகையில் ஜனாப் ஏ.எம்.நௌஷாட், ஜனாப் ஏ.எல்.அமீர், ஜனாப் எம்.ஐ.பௌஸ்தீன் ஆகியோர் இப்பாடசாலைக்காக இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கின்றார். இவர்களது நீண்ட கால சேவையினால் இம்மண் சிறப்புற்று விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று பெருமையுடன் கூறிக் கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

இன்று அல்-மர்ஜானின் பெருமைகளாக, சிறப்புக்களாக பல விடயங்களை நாம் முன்னிலைப் படுத்தலாம். இங்குள்ள ஆசிரியர் குழாமும், அதிபர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கல்வி சாரா பணியாளர்கள் என்பவர்களுக்கிடையே அன்னியோன்ய உறவுகள் எப்போதும் வளக்கப்படுகின்றன. முகாமைத்துவக் குழுவானது சிறப்பான முறையில் ஆலோசனைகளை வழங்குகின்றது. இப்பாடசாலையின் கட்டமைப்பு சிறப்புற அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆவ்வாறு எந்தவொரு குழுவாக இருந்த போதிலும் அதிபரோடு இயைந்து பாடசாலையின் வளர்ச்சியில் படிக்கற்களாக மிளிர்கின்றன.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது 2020 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர் ஜனாப் எம்.ஐ.மீரா முகைதீன் அவர்களின் வழிகாட்டலும் அதற்கு கிடைக்கப்பெற்று, 276 உறுப்பினர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தின் பிரதான குறைபாடாக இருந்த கதிரைகள் பழைய மாணவிகளுள் ஒருவரான திருமதி சப்ரின் ரசீன் அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது. அவரால் மைதானத்திற்கான ஸ்டேடியமும் புனரமைக்கப்பட்டது. அதேபோல பழைய மாணவர்களின் பங்களிப்புக்களுடன் பாடசாலையின் பெயர் பலகை சிறப்பாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளதுடன் வாசிக சாலையின் புதிய நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என பல்வேறு செயற்றிடங்கள் நிறைவேறிய போதிலும் எமது அன்னையர் விளைநிலமான அல்-மர்ஜான் இன்றும் பல தேவைகளை வேண்டி நிற்கின்றமையினை அதன் இன்றைய தோற்ற பொலிவிலே காண்பது மிகவும் கவலை தரக்கூடிய அம்சம் எனலாம்.

இப்பாடசாலையில் கற்ற பலரும் இன்று சமூகத்தில் உயர்ந்த இடங்களில் பிரகாசிக்கின்றமை இதன் சிறப்பம்சமெனலாம். இவர்கள் அனைவரதும் கைகோர்ப்புக்கள் இப்பாடசாலையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கு அவசியமென கருதுகின்றேன். இந்த அடிப்படையில் பழைய மாணவர்கள் பலரதும் பங்களிப்புக்களும் அர்ப்பணிப்புகளும் இப்பாடசாலையினை மேலும் பொலிவாக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இத்துடன் நின்று விடாது எமதூரின் சமூக அமைப்புகளும், அரசியல் புலங்களும்,கல்வி புலங்களும் ஒன்றித்து இம்மகளிர் கல்லூரியை பிரகாசிக்க செய்வது ஒவ்வொருவரதும் தலையாய கடன் என கருதுகிறேன்.

நன்றி

Mrs. A. சித்தி சுஹைறா (BA, PGDE)
சிரேஸ்ட ஆசிரியை

மர்ஹூம் **Dr. SMM. உமர்மௌலானா** (ZDE)

மற்றும்

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை

மர்ஹூமா **Mrs. சரீபா நஸீர்** (ஆசிரியை)

இருவரும் ஆற்றிய கல்விப் பணிக்காக

அல்லாஹ் உயர்ந்த கூலியை

மறுமையில் வழங்க பிரார்த்திறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-மர்ஜானும் சுற்றாடல் முன்னோடி கழகங்களும்

இணைபாடவிதான செயற்பாட்டின் முக்கிய அங்கமான சுற்றாடல் முன்னோடி கழகங்களின் செயற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் ஒரு வேலை திட்டமாகும். இது எமது பாடசாலை கமு/சது/ அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு ஜனாப் ACM. முஸ்தபா ஆசிரியர் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு திருமதி அபிரா சலீம் அதிபர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கழகத்தின் மூலம் எமது கல்லூரி சிறந்த தாவர போர்வை கொண்ட குளிர்ச்சிகரமான பாடசாலையாக மாற்றப்பட்டதுடன் ஆழவாநச ஸ்ரீலங்கா திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட பூங்காவனம் 2017ல் ஸ்தாபிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சி திட்டத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட சுற்றாடல் முன்னோடி பதக்கங்கள் மற்றும் 180 க்கும் மேற்பட்ட பச்சை வண்ண பதக்கங்கள் 2018 ஆம் ஆண்டு வரைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் இத்திட்டத்தின் நடைமுறை நிர்வாக சவால்கள் காரணமாக அதன் பின்னரான வெள்ளி வர்ண பதக்கம் தங்க வர்ண பதக்கம் மற்றும் ஜனாதிபதி விருது போன்றவற்றை எட்டுவதில் பல சிரமங்கள் காணப்பட்டன.

2020ன் பின்னர் அதிபர்களான ஜனாப் HM. அன்வர் அலி, ஜனாப் MI. மீராமுகைதீன் ஆகியோரின் சிறந்த தலைமைத்துவம் ஆலோசனை வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு கிடைத்ததன் காரணமாக இத்திட்டமானது மீண்டும் புத்துணர்வு பெற தொடங்கியது. ஜனாப் ACM. முஸ்தபா ஆசிரியர் ஜனாபா AFF. பஸ்னா ஆசிரியை ஜனாபா MA. ஷரிகா பானு ஆசிரியை ஜனாபா ஆஜகு. பர்சானா ஆசிரியை ஆகியோரின் அயராத முயற்சியிலும் இவ்விரு அதிபர்களின் சிறந்த வழிகாட்டலின் காரணமாக மாணவர்களின் பூரண கள ஆய்வு செயற் பாடுகளின் நிமித்தம் தற்பொழுது எமது பாடசாலை பல வெள்ளி வர்ண பதக்கங்களையும் 05 தங்கவர்ண பதக்கங்களையும் பெற்றதுடன் 2024 டிசம்பர் காலப்பகுதிகளில் இடம் பெறவிருக்கும் ஜனாதிபதி விருதுக்காக மாணவிகளான AR. றொஷானி, MI. இப்பத் நதா, AM. ஸைனப் ஹிஜா, MI. இனாபா, ARF. நுஸ்ஹா ஆகிய ஐவரும் தமது செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மாணவர்கள் இவ்விருதினை பெறும் பட்சத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளிவிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பல்கலைக்கழகத் தேர்வின் போது 04 விஷேட புள்ளிகளையும் கல்வியியல் கல்லூரி நேர்முகத் தேர்வின் போது 20 புள்ளிகளையும் பெற்று தமது உயர்கல்வி வாய்ப்பினை இலாபகரமாக பெற்றுக்கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தகவல்
ACM. முஸ்தபா ஆசிரியர்,
கோட்ட ஆணையாளர், சம்மாந்துறை,
சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRINCIPALS
(1950-2024)

| | Name of Principals | From | To |
|---|---|---|---|
| 01. | Mr. AM. Meera Lebbe | 01.09.1950 | 30.04.1951 |
| 02. | Mr. A. Ahamed Lebbe | 01.05.1951 | 28.02.1959 |
| 03. | Mr. MIK. Mohamed | 01.03.1959 | 10.03.1961 |
| 04. | Mr. KA. Majeed | 11.03.1961 | 16.08.1961 |
| 05. | Mr. MIK. Mohamed | 17.08.1961 | 14.07.1970 |
| 06. | Mr. KA Rasool | 15.07.1970 | 28.02.1973 |
| 07. | Mr. AM. Moera Lebbe | 01.03.1973 | 07.01.1976 |
| 08. | Mr. MIK. Mohamed | 08.01.1976 | 15.05.1986 |
| 09. | Mr. UM. Mohaideen | 16.05.1986 | 30.04.1987 |
| 10. | Mr. UL. Aliyar | 01.05.1987 | 30.06.1989 |
| 11. | Mr. I. Aliyar | 01.07.1989 | 01.07.1994 |
| 12. | Mr. KLA. Thasool | 01.07.1994 | 04.09.1994 |
| 13. | Mr. 1. Aliyar | 04.09.1994 | 25.03.1996 |
| 14. | Mr. SHM. Musthafa | 26.03.1996 | 06.02.2002 |
| 15. | Mr. KMSM. Thameem | 07.02.2002 | 19.10.2003 |
| 16. | Mr. KLA. Thasool | 20.10.2003 | 04.01.2011 |
| 17. | Mrs. Afeera Salaam | 05.01.2011 | 25.02.2018 |
| 18. | Mr. UL. Lafir | 26.02.2018 | 08.01.2020 |
| 19. | Mr. HM. Anver Ali | 09.01.2020 | 10.06.2021 |
| 20. | Mr. MI. Meeramohaideen | 11.06.2021 | 21.08.2023 |
| 21. | Mr. HM. Anver Ali | 22.08.2023 | Till Now |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தொகை பற்றிய விபரம் (1950-2024)

| ஆண்டு | மாணவர் தொகை |
|---|---|
| 01.09.1950 | 98 |
| 11.09.1950 | 130 |
| 29.10.1950 | 145 |
| 10.11.1950 | 170 |
| 19.02.1951 | 180 |
| 23.04.1951 | 191 |
| 04.06.1951 | 205 |
| 21.09.1964 | 441 |
| 27.10.1977 | 757 |
| 22.01.1980 | 1055 |
| 30.04.1995 | 1513 |
| 14.04.2001 | 1453 |
| 15.05.2024 | 1250 |

## உயர் தரத்தில் மாவட்ட நிலையில் முதல் நிலை (1st Rank) பெற்றோர் விபரம்

| பெயர் | தோற்றிய ஆண்டு |
|---|---|
| MAM. முனவ்வரா | 2001 |
| U.L. றிஷானா | 2005 |
| M.A. பாத்திமா மிபாஸா | 2007 |
| V.T. ஹசீனா | 2009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GCE O/L, A/L அடைவுமட்ட விளக்கப்படம்

**G.C.E. (A/L) Result Analysis**


| Year | Sat | Pass | Pass % |
|---|---|---|---|
| 2023 | 115 | 100 | 87% |
| 2022 | 95 | 78 | 82% |
| 2021 | 80 | 65 | 81% |
| 2020 | 135 | 94 | 70% |
| 2019 | 103 | 85 | 83% |
| 2018 | 95 | 60 | 63% |
| 2017 | 109 | 83 | 76% |
| 2016 | 96 | 70 | 73% |
| 2015 | 107 | 63 | 59% |
| 2014 | 92 | 64 | 70% |
| 2013 | 96 | 78 | 81% |

**G.C.E. (O/L) Result Analysis**

| Year | Sat | Pass | Pass % |
|---|---|---|---|
| 2022 | 118 | 76 | 64% |
| 2021 | 146 | 90 | 62% |
| 2020 | 148 | 89 | 60% |
| 2019 | 158 | 84 | 53% |
| 2018 | 117 | 66 | 56% |
| 2017 | 159 | 85 | 53% |
| 2016 | 131 | 76 | 58% |
| 2015 | 129 | 63 | 49% |
| 2014 | 111 | 82 | 74% |
| 2013 | 99 | 56 | 57% |


**G.C.E. (A/L) Result Analysis**

Qualified to Univertisty Admission (Last 11 Years)




**G.C.E. (O/L) Result Analysis**

(Last 10 Years)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடங்கள் பற்றி தகவல்கள்

| | |
|---|---|
| 1950 | கொட்டில் தரையில் (Temporary hut) |
| 1951 | Eelamehem Packkeerthambi Hall |
| 1958 | Ali Labbe Podiyar Hall |
| 1961 | Kalyana Hall |
| 1967 | Sulaima lebbe Hall |
| 1981 | Meera Lebbe Hall |
| 1987 | Merza Buiding Hall |
| 1991 | O/L Science Laboratory |
| 1994 | Assembly Hall |
| 1994 | Abdul Majeed Hall |
| 1997 | Green House |
| 1998 | Activity Room |
| 2000 | A/L Science Laboratory |
| 2003 | Library |
| 2005 | Hostel |
| 2006 | Toilet compartment |
| 2015 | Luxury Toilet |
| 2016 | Mahinthothya Laboratory |

**AM. Nowshad** (KKS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# KADAFI HOTEL
# கடாபி ஹோட்டல்

சோட்ஈட்ஸ் வகைகள், பேக்கரி உணவுப்பண்டங்கள், கேக் வகைகள்,
கொத்துறொட்டி, பிரைட்ரைஸ், புரியாணி போன்ற உணவு வகைகளும்
நிகழ்வுகளுக்கு தேவையான விசேட ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

077 80 80 817

79, Police Road, Sammanthurai. (Near HNB Bank)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அதிபர் மற்றும் பிரதி, உதவி அதிபர்கள்**

ஏ.எம். றிபாஸ் (உதவி அதிபர்), ஏ.எல்.எம். சலீம் (பிரதி அதிபர்), ஏ.ஆர்.எம். உவைஸ் (பிரதி அதிபர்) எச்.எம். அன்வர் அலி (அதிபர்), ஏ.எம். சிறாஜுன் நிஸா (உதவி அதிபர்), எம்.எச். ஜெஸீலா (உதவி அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை முகாமைத்துக்குழு - 2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



STAFF - 2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STAFF LIST - 2024

| S. No | Name | Grade | S. No | Name | Grade |
|---|---|---|---|---|---|
| 1 | Mr. HM. Anver Ali (PR) | SLPS I | 26 | Mr. MRM. Irshath | SLTS I |
| 2 | Mr. ARM. Uwais (DP) | SLPS I | 27 | Mrs. HM. Jameethu | SLTS I |
| 3 | Mr. ALA.Saleem (DP) | SLPS III | 28 | Mrs. AL. Marzooka | SLTS I |
| 4 | Mr. AMM. Rifas (AP) | SLPS III | 29 | Mrs. A. Rihana | SLTS I |
| 5 | Mrs. AM. Sirajun Niza (AP) | SLPS III | 30 | Mr. A. Meerasahib (SH) | SLTS I |
| 6 | Mrs. MH. Jaseela (AP) | SLPS III | 31 | Mr. AM. Ibrahim (SH) | SLTS 2I |
| 7 | Mrs. FUA. Rasik | SLTS I | 32 | Mr. MH. Hafeer | SLTS 2I |
| 8 | Mr. IM. Salih | SLTS I | 33 | Mr. CM. Thilsath | SLTS 2I |
| 9 | Mrs. US. Mansoor | SLTS I | 34 | Mr. MJ. Mujeebur Rahman | SLTS 2I |
| 10 | Mrs. A. Sithy Suhaira | SLTS I | 35 | Mr. MT. Abdul Salam | SLTS 2I |
| 11 | Mrs. MM. Ummu Fowsiya | SLTS I | 36 | Mr. AL. Nafar | SLTS 2I |
| 12 | Mr. ARM. Hasraf | SLTS I | 37 | Mr. UK. Sathakathullah | SLTS 2I |
| 13 | Mr. AM. Ameer (SH) | SLTS I | 38 | Mr. SL. Abdul Majeed (SH) | SLTS 2I |
| 14 | Mrs. SN. Razeek | SLTS I | 39 | Mr. SLM. Fareed (SH) | SLTS 2I |
| 15 | Mrs. SHM. Raji | SLTS I | 40 | Mrs. RM. Mussamil | SLTS 2I |
| 16 | Mrs. MH. Jawsan Sakiya | SLTS I | 41 | Mrs. MT. Jesmin (SH) | SLTS 2I |
| 17 | Mr. MMM. Salfiyar | SLTS I | 42 | Mrs. MM. Mubeetha | SLTS 2I |
| 18 | Mrs. HM. Sareem (SH) | SLTS I | 43 | Mrs. MI. Mujeeba | SLTS 2I |
| 19 | Mr. AL. Ameer Mohamed | SLTS I | 44 | Mrs. MM. Sithy Munasa | SLTS 2I |
| 20 | Mr. AL. Majeed | SLTS I | 45 | Mrs. Z. Mulka Rumaiza | SLTS 2I |
| 21 | Mrs. MTS. Nihara Umma | SLTS I | 46 | Mrs. UL. Fasloona | SLTS 2I |
| 22 | Mrs. JM. Ajwath Ali | SLTS I | 47 | Mrs. MR. Fathima Ruzana | SLTS 2I |
| 23 | Mrs. NL. Noor Shamila | SLTS I | 48 | Mrs. ZAU. Zahira | SLTS 2II |
| 24 | Mrs. MI. Ummu Sharmila | SLTS I | 49 | Mr. MM. Nowfal | SLTS 2I |
| 25 | Mr. AM. Abdul Azeez (SH) | SLTS 2I | 50 | Mr. MT. Abdul Ahath | SLTS 2I |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STAFF LIST-2024

| S. No | Name | Grade | S. No | Name | Grade |
|---|---|---|---|---|---|
| 51 | Mr. PM. Mohamed Riswan | SLTS 2I | 74 | Mrs. IL. Rikasa | SLTS 2II |
| 52 | Mr. MS. Jawath | SLTS 2I | 75 | Mrs. R. Supatharsini | SLTS 2II |
| 53 | Mrs. MU. Fathima Rakeeza | SLTS 2I | 76 | Mrs. AM. Sahiya Banu | SLTS 2II |
| 54 | Mrs. Mumtaz Hameed | SLTS 2I | 77 | Mrs. FRM. Farsan | SLTS 2II |
| 55 | Mrs. MTF. Shakeela | SLTS 2I | 78 | Mr. MI. Rifkhan Ahamed | SLTS 2II |
| 56 | Mrs. KL. Ummul Mujahitha | SLTS 2I | 79 | Mrs. AS. Siraj Ali | SLTS 2II |
| 57 | Mr. AM. Arsad | SLTS 2II | 80 | Mrs. Faheetha Munas | SLTS 2II |
| 58 | Mrs. HM. Jesmin | SLTS 2II | 81 | Mrs. ILS. Nowfiya | SLTS 2II |
| 59 | Mrs. MIK. Iqrama | SLTS 2II | 82 | Mrs. MA. Yasmin | SLTS 2II |
| 60 | Mr. ACM. Musthafa | SLTS 2II | 83 | Mr. AL. Rafeek | SLTS 3I (A) |
| 61 | Mrs. SRM. Ilyas | SLTS 2II | 84 | Mrs. YLF. Nusra | SLTS 3I (B) |
| 62 | Mrs. S. Anver Sathath | SLTS 2II | 85 | Mrs. ABF. Hirasa | SLTS 3I (B) |
| 63 | Mrs. AR. Nirosin | SLTS 2II | 86 | Mrs. MI. Fathima Farsana | SLTS 3I (B) |
| 64 | Mrs. MS. Jesmina M.Ali | SLTS 2II | 87 | Mrs. AMF. Mifra | SLTS 3I (B) |
| 65 | Mrs. MI. Riswana | SLTS 2II | 88 | Mr. IM. Shiyam | SLTS 3I (B) |
| 66 | Mrs. UL. Rizana Asmeer | SLTS 2II | 89 | Mrs. AF. Nasooha | SLTS 3I (B) |
| 67 | Mrs. KLF. Farwin | SLTS 2II | 90 | Mrs. J. Fathima Safinas | SLTS 3I (B) |
| 68 | Mr. S. Selvakumar | SLTS 2II | 91 | Ms. AJ. Ferros | SLTS 3I (B) |
| 69 | Mrs. MA. Zareeka Banu | SLTS 2II | 92 | Mrs. MT. Rasmiya | SLTS 3I (B) |
| 70 | Mrs. AK. Nasmiya | SLTS 2II | 93 | Mrs. V. Vijitha Veny | SLTS 3I (B) |
| 71 | Mr. MM. Manaseer | SLTS 2II | 94 | Mrs. MI. Sajira Banu | SLTS 3I (B) |
| 72 | Mr. SM. Nibras (T.A) | SLTS 2II | 95 | Ms. P. Nirojini | SLTS 3I (B) |
| 73 | Mrs. F. Fathima Fihama | SLTS 2I | 96 | Mrs. MAR. Nadishani | SLTS 3I (B) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STAFF LIST-2024

| S. No | Name | Grade | | S. No | Name | Grade |
|---|---|---|---|---|---|---|
| 97 | Mr. MN. Mohamed Rumais | SLTS 2II | | | **DEVELOPMENT OFFICERS** | |
| 98 | Mrs. MN. Rusaina Banu | SLTS 3I (B) | | 1 | Ms. MA. Fathima Sajitha | DO III |
| 99 | Mrs. HMF. Husna | SLTS 2II | | 2 | Miss. M. Fakiha Kowther | DO III |
| 100 | Mrs. MT. Rismiya (T.A) | SLTS 3I (B) | | 3 | Mrs. AN. Fathima Nusrath | DO III |
| 101 | Mrs. AMF. Rifna (TA) | SLTS 2II | | 4 | Mrs. Z. Fathima Hasna | DO III |
| 103 | Mrs. AR. Nasrath Begum (TA) | SLTS 2II | | 5 | Mrs. AL. Asmiya | DO III |
| 105 | Mr.AMS.Nafeer | SLTS I | | 6 | Mrs. MM. Fathima Murshitha | DO III |
| 105 | Mrs.ST.Fathima (TA) | SLTS 3I (B) | | 7 | Mrs. AF. Fathima Shafna | DO III |
| 106 | Mrs. T.L Jameela | SLTS I | | 8 | Mrs. MA. Fathima Silmi | DO III |
| 107 | Mrs.MM.Fathima Sharafa | SLTS 3I (A) | | 9 | Mrs. A. Rifaya | DO III |
| 108 | Mrs.MA.Fathima Ilhama | SLTS 3I (A) | | 10 | Mr. MHM. Abdul Azeez | DO III |
| 109 | Mrs. AL .Riyaza Jahan | SLTS 2I | | 11 | Mrs. MI. Sahitha | DO III |
| | | | | 12 | Mrs. MI. Asmath Banu | DO III |
| | | | | | **NON ACADAMIC STAFF** | |
| N1 | Mr. AM. Nowsad | KKS | | N4 | Mrs. K. Sapthika | Sports |
| N2 | Mr. IL. Ameer | | | N5 | Mrs. AL. Rifaya | |
| N3 | Mr. MI. Fowstheen | | | | | |
| | | | | | **COLLEGE OF EDUCATION** | |
| 1 | Miss. MM.Fathima Shamha | | | 1 | Miss. AKF. Rackhana | Science |
| 2 | Miss. MT.Fathima Safrin | | | 2 | Miss. MRF. Risna | Islam |
| 3 | Miss. MA.Thoofa | | | 3 | Miss. SAF. Afham | Maths |
| 4 | Miss. MF.Basma | | | 4 | Miss. S.Shafka Jezoom | |
| 5 | Miss. AM.Mishrul Natha | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SDEC MEMBERS - 2024

| | |
|---|---|
| HM. அன்வர் அலி - அதிபர் | (தலைவர்) |
| AJM. ஹனீபா - சமூர்த்தி விசாரனை அதிகாரி | (செயலாளர்) |
| MI. றிப்கான் - ஆசிரியர் | (பொருளாளர்) |
| I. அப்துல் கபூர் - ARB உரிமையாளர் | (உபதலைவர்) |
| SM. நபீர் - பணிப்பாளர், நஜா பௌன்டேசன் | (உறுப்பினர்) |
| MSM. அன்சார் - சட்டத்தரணி | (உறுப்பினர்) |
| AC.நுஸ்றத் நிலோபரா -(DDE) EPSI இணைப்பாளர் | (உறுப்பினர்) |
| அஷ்ஷேஹ் ARM.உவைஸ் (நளீமி) - பிரதி அதிபர் | (உறுப்பினர்) |
| ALA. சலீம் - பிரதி அதிபர் | (உறுப்பினர்) |
| MA. சலாம் - வர்த்தகர் | (உறுப்பினர்) |
| AL. அமீர் முஹம்மட் - ஆசிரியர் | (உறுப்பினர்) |
| A. ஹக்கீம் - வர்த்தகர் | (உறுப்பினர்) |
| VA. றஹீம் - ஓய்வு நிலை நில அளவையாளர் | (உறுப்பினர்) |
| AMM. றிபாஸ் - உதவி அதிபர் | (உறுப்பினர்) |
| AM. இப்றாஹீம் - ஆசிரியர் | (உறுப்பினர்) |
| UK. சகத்துல்லா - ஆசிரியர் | (உறுப்பினர்) |
| SI. அபூபக்கர் - ஆசிரியர் | (உறுப்பினர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு (SDEC - 2024)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாடசாலையின் வேர்கள்**

அதிபருடன், ஏ.எம். நௌஷாட், எம்.ஐ. பௌஸ்தீன், ஐ.எல்.அமீர்




**அதிபருடன் சாரணியர் குழு - 2024**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Netball Team - 2024**



**Principal, Discipline Committee with Prefect - 2024**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S&T Brothers

CALTEX, NESTLE, HEMAS, MALIBAN

MRM. Mafas
(Proprietor)

No. 417, Ampara Road Sammanthurai.

Mobile: 077 2016172

# ARB Home Luxury

**No. 223, Ampara Road, Sammanthurai**

**Tel: 067 2055554, Mobile: 077 3581554**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1989 தொடக்கம் 2020 வரை
## க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட பழைய மாணவ மாணவிகளின் விபரம்

**DOCTORS (MBBS)**

1. IL. Ummul Husna (2011)
2. A. Fairosa Farwin (2013)
3. AC. Fathima Unaiza (2014)
4. AK. Sarunjsun (2019)

**LAWYERS**

1. K. Rimziya (LLB) - (2003)
2. MAF. Mifasa (LLB) - (2007)
3. VT. Haseena (LLB) - (2009)
4. A. Fazoona (LLB) - (2012)

**LECTURERS**

1. Prof. AMI. Jariya (1993)
2. Prof. MAC.Salfiya Ummah(1991)
3. MS. Shafana - (2006)

**PRINCIPALS**

1) U. Iynul Yakeen (SLPS-III) (2002)
2) AS. Nafeera (SLPS) - (2006)
3) AM. Sirajun Nisa (SLPS-III)
4) M. Mahisa Banu (SLPS-III)

**ACCOUNTANTS**

1. ST.Abdul Jifry (Accountant) 1991

**SLAS**

1. AL. Hifthika Banu (SLAS) - (2001)
2. MI. Muwahfika (SLAS) - (2009)

**SLIATE**

SL. Musthafa
(SLIATE Director) - (1991)

**RADIOTHERAPY**

1. MY. Fathima Jumana (2016)

**UNANI MEDICINE**

1. IL. Farzana (2002)
2. AL. Nazreen Jahan (2002)
3. A.Rimaisa (2015)
4. AR. Fathima Suhaila (2019)

**Medical Laboratory Science**

2. MY. Sirajul Muneera (2007)
3. MN. Fathima Faseela (2011)

**B.Sc. Nursing**

1. AG. Wafeetha Begum (2009)
2. ARM. Jaseeka (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B.Sc. (Biological Science)**

1. AM. Inul Hamsiya (2000)
2. MS. Nusrath Amanah (2001)
3. AM. Inul Raziya (2003)
4. M. Sajitha (2007)
5. MF. Aneesul Shihnaz (2008)
6. MA. Fathima Sumaiya (2009)
7. AA. Fathima Muneera (2010)
8. SR. Sithy Jahira (2010)
9. AB. Fathima Maleeha (2011)
10. R. Rajitha (2012)
11. A. Fathima Safana (2013)
12. IF. Majitha (2015)
13. YL. Fathima Sasna (2015)
14. IL. Fathima Sasna (2016)
15. AF. Nuha (2016)
16. MJF. Sabrinas (2016)
17. AH. Rifna (2016)
18. SLF. Raksana (2017)
19. MM.murshitha (2019)
20. MJF. Shimara (2019)
21. M. Fathima Afrin (2020)
22. IL. Nusrath Banu (Agriculture) - (2019)
23. A. Zeenath Natha (2020)
24. AA. Fathima Rosni (2020)
25. MT. Fathima Jifna (2020)

**B.Sc. (PHYSICAL SCIENCE)**

1. AR. Jeenathul Sajitha (2012)
2. S. Saroth Jahan (2018)
3. AF. Sasna (2018)
4. MRF. Rifna (2019)

**COMMERCE STREAM**

1. AM. Yoonus (1990)
2. KLS. Fowjiya (1990)
3. AL. Aliyar (1992)
4. UL. Jaseema (1992)
5. KLK. Farzana (1992)
6. AMI. Jifriya (1993)
7. MB. Nafeela Umma (1993)
8. NH. Nairose (1993)
9. MB. Najeetha (1993)
10. Subaitha (1996)
11. AM. Ayeshja Umma (1996)
12. A. Fathima Nahar (1996)
13. KL. Faisa (1997)
14. PL. Sithy Rasheetha (1998)
15. R. Riyana (2001)
16. HM. Fathima Sifaya (2001)
17. MI. Fasliya (2003)
18. MAF. Aneesa (2011)
19. ANF. Nusrath (2012)
20. N. Rukaiya Banu (2016)
21. N. Dilsan Banu (2019)
22. SF. Nufla (2019)
23. A. Benazir (2019)
24. IF. Nifasa (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ARTS STREAM**

1. A.Sithy Suhaira (1989)
2. AL. Ayesha (1995)
3. MT. Sithy Zameena (1995)
4. MB. Faizana (1996)
5. Al. Ayesha (1996)
6. MM. Fareetha (1996)
7. MI. Samsun Nihara (1996)
8. MAC. Jaseema (1996)
9. SI. Safeena (1997)
10. MI. Samsun Nisa (1997)
11. MH. Noorul Hifasa (1998)
12. MI. Mujeeba (2000)
13. MM. Farzana (2000)
14. A. Farzana (2000)
15. MM. Munawwara (2001)
16. AR. Nihara (2001)
17. Mushfika (2001)
18. A.Salama (2001)
19. VC. Mowfira (2001)
20. MC. Sanoofa (2001)
21. MI. Sithy Naseefa (2001)
22. SI. Sithy Najeeha (2002)
23. AW. Sithy Natheera (2002)
24. M. Nusrath Begum (2002)
25. MI. Jasmin (2003)
26. A.Sihnas (2003)
27. SI. Farvin (2003)
28. Ahf. Sifa (2003)
29. SI. Hafeera (2003)
30. MN. Rihana (2003)
31. A. Inul Raziya (2003)
32. F. Rifasa (2004)
33. AJF. Fazeeha (2004)
34. AJ. Nawsiya (2004)
35. MB. Rinosa (2004)
36. HMF. Rumaisa (2004)
37. UL. Risana (2005)
38. MT. Siyana Begum (2005)
39. K. Safeena (2005)
40. MH. Ayesha (2005)
41. MB. Fasliya (2005)
42. SI. Inul Siyama (2005)
43. ALF. Faslin (2005)
44. AB. Rinoosa Begum (2006)
45. AB. Faisha (2006)
46. ARF. Jaseela (2006)
47. AJ. Kuraisa (2006)
48. MA. Mumthaj (2006)
49. M. Rajitha (2006)
50. MB. Majitha (2006)
51. AL. Rafeeka (2006)
52. ALW. Sulaiha (2006)
53. AL. Marliya (2006)
54. Kl.Mmmu Jaseema (2006)
55. MB. Majitha (2006)
56. AJF. Farsana (2007)
57. HF. Sanfara (2007)
58. A. Najimunnisa (2007)
59. MA. Rifana (2007)
60. AL. Sithy Rasiya (2008)
61. MM. Fahmitha Begum(2008)
62. MTF. Asmiya (2008)
63. JF. Siromiya (2008)
64. MI. Safeeya (2008)
65. AL. Ummul Jabira (2008)
66. S. Rija Banu (2008)
67. AH. Rinosa (2009)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. R. Riyana (2009)
69. ARF. siraja (2009)
70. IHF. sakira (2009)
71. AB. riswana (2010)
72. MN. husaina Banu (2010)
73. KR. nusrath Jahan (2010)
74. V. Rasukkuna (2011)
75. Faseena Banu (2011)
76. AL. Asmiya (2012)
77. JF. Jumaila (2012)
78. YBHF. Saleema (2012)
79. A. Sajitha Farwin (2012)
80. MLF. haneeka (2012)
81. RF. Rustha (2012)
82. AG. Safeena (2012)
83. K. Nisri (2012)
84. AK. Shaheela Banu (2012)
85. MN. Farwin (2012)
86. AKF. Qifnas (2012)
87. HF. Safiya (2012)
88. HL. Hasna Begum (2012)
89. Asmath Rasiya (2012)
90. A. Hazeena Banu (2013)
91. AW. Sumra (2013)
92. MI. Asmath Banu (2014)
93. AWF. Hazana (2014)
94. SL. Sahitha (2014)
95. LF. Jaseela (2014)
96. AMF. Basma (2014)
97. RF. Irsana (2014)
98. MT. Razvina (2014)
99. A.L. Basheera (201
100. SM. Hakeema (2015)
101. A. Nasbiya Begum (2015)
102. AB. Ruksana (2015)
103. AS. Farjis Fathima (2015)
104. SF. Sajeela (2015)
105. AL. Thamkin Banu (2015)
106. MTF. Munawwara (2016)
107. JF. Jumana (2016)
108. M. Fasna (2016)
109. KRF. Nusfa (2016)
110. SLF. Ruksana (2016)
111. MTF. Faasoona (2016)
112. M. Sayira (2016)
113. ACF. Seefa (2016)
114. MN. Ruhana (2016)
115. MSF. Riska (2016)
116. AL. Rosmy Farhath (2016)
117. MI. Fasoona (2016)
118. M. Fathima Rusky
119. A. Rinosa (2016)
120. S. Rosmi (2017)
121. IL. Imrana (2017)
122. R. Rayeesa Hasmath (2017)
123. A. Lufna (2017)
124. A. Kansa Banu (2017)
125. AAF. Akeela (2017)
126. SLF. Faseena (2017)
127. F. Afrose (2017)
128. JN. Ayesha Banu (2017)
129. ALF. Rifna (2017)
130. AF. Ifama (2017)
131. MF. Riska (2017)
132. MLF. Aneera (2018)
133. MI. Akila Banu (2018)
134. AF. Maheesa (2018)
135. JN. Shifanu (2018)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. NF. Nafla (2018)
137. IR. Shireen (2019)
138. MSF. Nihla (2019)
139. NF. Sameela (2019
140. BF. Farhana (2019)
141. IF. Rajiya (2019)
142. KMF. Juha (2019)
143. SF. Safeela (2019)
144. MT. Aakila Siyatha (2019)
145. UAF. Nuskiya (2019)
146. ARF. Sameera (2019)
147. M. Nusla Banu (2019)
148. A.Fathima Mifrah (2020)
149. R.Fathima Akila (2020)
150. B. Fasmila (2020)
151. AG. Sirafa (2020)
152. S. Riska Banu (2020)
153. MA. Mubasira (2020)
154. AS. Sashnas Begum (2020)
155. MT. Aakila Siyatha (2020)
156. S. Fathima Shafeela (2020)

**TECHNOLOGY STREAM**

1. S. Hajistha Begum (2019)
2. AF. Lufna (2019)
3. SF. Asra (2019)
4. AKF. Rustha (2019)
5. MF. Nusha (2019)
6. AM. Fathima Afrin (2020)
7. A. Shahathaf Hana (2020)
8. AWF. Jahjan (2020)
9. MRF. Thashrifa (2020)
10. SF. Sakira (2020)
11. A. Fathima Afka (2020)

**2020 வரை தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள்**
**விபரம் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளது**
**ஏனைய வருடங்களுக்கான பழைய மாணவர்களின் விபரங்கள்**
**எதிர்கால சஞ்சிகைகளில் பதிவிடப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 24175

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி

CLASS NO.
ACCESSION NO. 24175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சம்மாந்துறையின் தென்பகுதியில் கருவாட்டுக்கல் பிரதேசத்தில் Dr. மீராலெவ்வையின் தலைமையில் அவருடைய நண்பர்களின் உதவியுடன் காடும் மலைகளும் நிறைந்த இப்பிரதேசத்தை காடுவெட்டி துப்பரவு செய்து கொட்டில் கட்டி முதல் பாடசாலை பாலர் வகுப்புடன் ஆரம்பமாகியது. 01.09.1950ம் ஆண்டு 93 மாணவர்களுடன் ஆரம்பமான இவ்வித்தியாலயத்தின் முதல் நாள் மதிய போசனம் மாணவர்களுக்கு வழங்கப் பட்டது!.

இப்பாடசாலைக் கொட்டிலை இலவசமாக கட்டிக் கொடுத்த இக்கிராமத் தலைவர்களையும், Dr. மீராலெவ்வை மற்றும் அவரது நண்பர்களையும் முதல் நாள் கிழக்கு மாகாண வித்தியாதிகாரி திரு. கிருஷ்ணபிள்ளை பாராட்டிப் பேசினார்!

கதை கூறுவதும் கேட்பதும் மனித இயல்பு. நாம் கூறும் கதைகளும் நமக்கு பிறர் கூறும் கதைகளும் நம் வாழ்க்கைச் சூழலை நிரப்புகின்றன. இக்கதைகள் ஊடாகவே நாம் உலகைக் காண்கிறோம். எம் வாழ்வும் இக்கதைகளை மீளச் சொல்லுவது போல் அமைந்து விடுகிறது.’

KM/ST/ Al-Marjan Muslim Ladies College
National School
Sammanthurai

ISBN 9786246606008

Print House str. 077 2635922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org